சிலம்பு-கஎ] பிரமாதி—புரட்டாசி [பரல்-கூ

கலித்தொகையி லொரு கதை

[மகிழ்நன்]

(உஉகூ-ஆம் பக்கத் தொடர்ச்சி)

*"ஒருகால், சில யானைகள் மேய்ந்துகொண்டிருந்த மலையின் கீழ்ப்பகுதியில் தீப்பிடித்து விரைவிற் பரவிற்று. அவை அங்குமிங்கும் ஓடிப்பார்த்தன; தப்பியோட முடியாவகையில் நெருப்பு அவற்றை வளைத்துக்கொண்டது. இந் நிலையில், அக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய களிறு, நெருங்கி வருகின்ற நெருப்பைக் கலங்காது நின்று உற்றுநோக்கித் தகுந்த ஓரிடத்தைக் குறித்துக்கொண்டு, ஆண்டேகி அருகிலிருந்த மரஞ்செடிகளைத் தாக்கி முறித்து நெருப்பில் தள்ளி மிதித்து, ஒரு வழியுண்டாக்கிப் பிற யானைகளை அழைத்துக்கொண்டு சென்றதைக் கண்டேன்," என்றியம்பினான் குறவன்.

"நன்று, சால நன்று; அரசு செய்வது ஆள்வது மட்டுமன்று; உற்றுழி உயிருங்கொடுத் துதவுவதொன்று என்றிவ் யானை காட்டுந்தன்மை தனி நன்று. அன்ப, அரசர் குடை பிடிப்பது எற்றிற்கு? அறிவையோ?" என்று ஒப்பிலான் வினவினான்.

---

* வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற, முகத்தவன் மக்களுண் முதியவன் புணர்பினா, லைவரென் றுலகேத்து மரசர்க ளகத்தராக், கைபுனை யரக்கில்லைக் கதழெரி சூழ்ந்தாங்குக், களிதிகழ் கடாஅத்த கடுங்களி றகத்தவா, முளிகழை யுயர்மலை முற்றிய முழங்கழ, லொள்ளுரு வரக்கில்லை வளிமக னுடைத்துத்தன், னுள்ளத்துக் கிளைகளோ டுயப்போகு வான்போல, வெழுவுறழ் தடக்கையி னினங்காக்கு மெழில்வேழ, மழுவஞ்சூழ் புகையழ லதர்பட மிதித்துத் தங், குழுவொடு புணர்ந்துபோங் குன்றழல் வெஞ்சுரம். (பாலைக்கலி 25: 1—11)

“இதுபற்றி மற்றவர் இன்றளவும் என்னை வினவியதில்லை; என்னை யானே வினவியதுமில்லை.”

“ஆயின், நவில்வேன், கேள். பசி, பிணி, பகை என்று மக்களுக்கு வெம்மை செய்வன மூன்று. ஓர் அரசனது ஆட்சிக் குட்பட்ட மக்களுக்கு இத்தீமைகள் நேரா என்பதற் கறிகுறி யாகக் குடை எழுந்தது. ஞாயிற்றின் வெப்பத்தைத் தாங்குங் குடையை யாவரு மறிவர்; அது போன்று, குடிகளுக்கு வருகின்ற வெம்மையை நீக்குங் குடை கொற்றக்குடை. நீ கூறிய யானை குடை யுடையதன்றேனும் வெம்மைதீர்த் தருள் செய்வதில் நன்மன்னரை யொத்ததே. இதை நினைந்து வியக்கின்றேன்.”

“குடை நிழலிருந்து குடிகளை வருத்தும் வேந்தரு முளரே!”

“அவர் ஆள்வாரல்லர்; ஆழ்வார்.”

“பொருந்தப் புகன்றாய். மற்றொன்று சொல்வேன், சிறிது செவிகொடு. எனது தினைப்புனத்திற்குத் தென்மேற்கில் கான்யாறு ஒன்று ஓடுகின்றது. வெள்ளம் பெருகி வருங்கால் அஃது இரைந்து விரைந்தோடும். அதில் நிறையக் கற்பாறைகளுண்டு. ஓயாது இளமழை பொழிந்த ஒருநாள், யானைக்கூட்ட மொன்று அக் கான்யாற்றைக் கடக்க அதிலிறங்கிற்று. நடத்தும் யானை முன்னே செல்ல, ஒன்றன்பின் ஒன்றாய்க் குட்டிகளுடன் பிற யானைகள் பின் தொடர்ந்தன. கூட்டத்திலுள்ள யானைக் கன்றுகளிரண்டு ஒன்றின்மீது ஒன்று நீரை முகந்து வீசி விளையாடிப் பாதையை விட்டு அகன்று சென்றன. அச்சமென்பதறியாது விளையாடித் திரிந்த கன்றுகளிரண்டில் ஒன்றின் முன்கால் நீருக்குள்ளிருந்த ஒரு கல்லிடுக்கில் அகப்பட்டுக் கொண்டது. காலை வாங்க முடியாமல் அக் கன்று வருந்தித் தன் கையை மேலே உயர்த்திக் கூவிற்று. தாய் யானை அரற்றி நின்றது. இதற்குள் மறுகரை போய்ச் சேர்ந்த அண்ணல் யானை பின் திரும்பிப் பார்த்துக் கடுகி அக் கன்றினருகே யோடி, நிகழ்ந்ததென்ன வென்பதை ஒருவாறறிந்து, நீண்ட, பெரிய தனது கையால் நீர்க்குள்ளிருந்த கற்களைத் துழவிப் பார்த்து, எளிதிற் கன்றை விடுவித்து, அணைத்துக்கொண்டு சென்ற காட்சியைப் பார்த்தேன்.”

“இனிது, இனிது, கனியினுமினிது, இச் செயல்.”

“ஆமாம்; இன்னும் பல இனியவை கண்டுளேன். உன்னோடு உரையாடுவது மிக இனிது. ஆனால் நேரமாகிறது.

நான் எனது ஊர்போய்ச் சேரவேண்டும். இன்னும் பலகால் ஒருவரை யொருவர் நாம் கண்டு மகிழும் பேறு கிடைக்கு மென்று நினைக்கிறேன். விடை தருகின்றாயா?"

"அன்ப, இன்று முதல் நாம் நண்பர். வேளை வாய்க்கும் பொழுதெல்லாங் கூடி மகிழ்வோம். யானையைக் கொல்ல வேண்டுமென்றெழுந்த எண்ணம் இப்பொழுது என்னுள்ளத்திலிருந்து நீங்கி விட்டது. நீ சொன்ன இனியவற்றில் என்னுள்ளம் அழுந்தியது. ஒரு முறை உன்னோடு காட்டிற்குட் சென்று சிலநாள் தங்கி, விலங்கினங்களின் வாழ்க்கையையும், வழக்கங்களையும் ஊன்றிக் கவனிக்க விரும்புகிறேன். எங்குந் திருவருள் விளங்குவதை நீ எனக்குத் தெளிவித்தாய். உன்னைப் போற்றுகின்றேன்."

"நன்மகனே, என்னோடு நீ வந்து தங்கும் நாளில் எல்லையுமிரவும் இன்பமே நுகர்வோம்."

"யான் கருதியதும் அதுவே. என் பெயர் ஒப்பிலான்; யானிருப்பது மணவூர்."

"நன்று; என் பெயர் வானன். போய் வருகின்றேன்."
"வருக."

தன்னைவிட்டு நீங்கிய குறமகனைப் பார்த்துக் கொண்டே சிறிது நேரம் ஒப்பிலான் நின்றான்; வந்த வழியே திரும்ப வேண்டுமென்று முதலில் அவன் நினைத்தான். இந்த நினைவு எக்காரணத்தாலோ அவனுக்கு அமைதி யளிக்கவில்லை. நேரே மேற்சென்று மலையின் மறுபுறமாக இறங்கிப்போவது நலமென்று அவனுக்குத் தோன்றிற்று. அவ்வாறு செய்தான்.

மலைகளின் சிறப்பைப்பற்றி ஒப்பிலான் ஆழ்ந்து கருதலானான். "மலைகளில்லாவிடில் இவ்வையகம் எத்தன்மையதாயிருக்கும்? உயரம் பள்ளமிலாத ஒரே வெளியாயிருக்கும். மேல், கீழ் என்ற வேற்றுமை தோன்ற இடமில்லை. ஒரே வெளியாகின்ற கடலும், ஒரே வெளியாயிருக்கும் நிலமுமே எங்குந் தோன்றும். இயற்கையின் இனிய அழகு மிகவுங் குறையும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற, ஒன்றைவிட ஒன்று தாழ்ந்த நிலவொழுங்கும், அவ்வவற்றிற்கேற்ற பல திறப்பட்ட வாழ்க்கை யமைப்பு மிரா. மழை பொழிவது எங்ஙனம் நிகழுமென்பதைக் கூறுதற்கில்லை. அஃதெவ்வாறாயினும், மலையில்லா வையகத்தில் ஆறுகள் பாய வழியில்லை. ஆறற்றவுலகு விரும்பும் பெற்றியதுகொல்? ஆழ்கடலுக்கும்

உயர்மலைக்குந் தொடர்புண்டாக்குவது ஆறே. அஃதில்லை யேல் வாணிபம் செவ்வனம் நடைபெறாது.'' இங்ஙனம் அவன் எண்ணியவனாய் வழி நடந்தான். சேணிற்றோன்றிய ஒரு மலை முடியிலிருந்து பால் வழிந்ததுபோல் ஓர் அருவி யோடி யது. அதை யடுத்துப் பல மலை முடிகள் ஒன்றைவிட ஒன்று உயர்ந்து, நீலக்கவின் பெற்று, அமைதி குடிகொள்ளும் இனிய இடங்களாய்த் திகழ்ந்தன. தான் உன்னியதை நிறுத்தி இவற்றை நோக்கிய ஒப்பிலான், "அமைதி, அமைதி, என்ன வமைதி!" என்று வியந்தான். "இவ் வமைதியைக் கருதுங் கால், நாட்டில் மக்கள் செய்யும் புரளியும் ஆரவாரமும் நகைப் பிற் கிடமாகின்றன. இன்றிருந்து நாளைப்போவார் தம்மை மறந்து இவ் வமைதியைக் கருதாததேன்? பனிமலையிற் கைலையிற் கார்நறுங்கொன்றை யணிந்தபிரான் வீற்றிருக்குங் காட்சியை, அமைதி யாதென்றறியார் உணர்ந்தின்புறலுங் கூடுமோ? இறைவற்குக் கோவில்கள் மலைகளிலிருக்கின்றமை இதுபற்றியே போலும். மலை விழையுஞ் செல்வன் மலைமகளை மணந்தான். அவன் புலித்தோல் கரித்தோல் உடுத்தோன் என்ப. இவை மலைவாழினங்கள். மான் பிடித்தான்; முயல் மிதித்தான்; மலைபோல், முடியில் திங்களணிந்தான்; ஆற் றைச் சடையிற் கரந்தான் என்ப. இது கடலை நோக்கி விரியும் ஆறு மலையை நோக்கிச் சிறுத்து மறைவதைக் காட்டிற்றென்று கொள்வேன். வானிலிருந்து முகிலாய் மலையிலிறங்கி, மழை யாய்ப்பெய்து, ஆறாயோடும் நீரின் தன்மை ஈண்டுணர்த்தப் பட்டதெனின், இழுக்கென்னை? உலகத்தை யொடுக்கி விரிக் குஞ் செயலின் குறியை இதிற் காண்கின்றேன். நிற்க, பழமை யிலிருந்து புதுமை தோன்றியதை யொப்பச் செஞ்சடைக் கடவுளிலிருந்து செவ்வேள் வந்தான். தந்தை மலையன்; மகன் குறிஞ்சிக் கடவுள். மலைமகளை யவன் மணக்கக் குறமகளை இவன் கொண்டான். எல்லாம் மலையின் தொடர்பு,'' என்று நினைத்துக்கொண்டே ஒப்பிலான் இறங்கி மலையினடிவாரத்தை யடைந்தான்.

சற்றுநேரம் ஒரு மரத்தடியி லமர்ந்து இளைப்பாறிய பின், நேரே வீட்டிற்சேகலா மென்று அவன் எண்ணினான். அவ னிருந்த இடத்திற்கு இரண்டு நாழிகைச் சேண்மையிலொரு பாலைநிலமுண்டென்பதை அவனறிந்திருந்தான். அங்கே ஆறலை கள்வர் வழிப்போக்கர்க்கு அவ்வப்போது விளைத்த கொடுமை களைப்பற்றி அவன் கேட்டவனாதலின், ஆண்டுச் சென்று, பல நாள் பயிற்சியுற்றுப்போன தன் தோளுக்கும் வில்லுக்கும் பயிற்சி யளிக்க ஒப்பிலான் விரும்பினான். பகலவன் வெம்மை

தாங்குதற் கரிதாயிற்று; நிலங் கொதித்தது. ஒப்பிலான் பாலை நோக்கி நடந்து,

“ஆறறி யந்தணர்க் கருமறை பலபகர்ந்து
தேறுநீர் சடைக்கரந்து திரிபுரந் தீமடுத்துக்
கூறாமற் குறித் ததன்மேற் செல்லுங் கடுங்கூளி
மாறாப்போர் மணிமிடற் றெண்கையாய் கேளினி.”

(கலித்தொகை: கடவுள்வாழ்த்து)

என்று பொருள்படு மொரு பாட்டை உளவெழுச்சியுடன் பாடினான். தனது ஆற்றலைக் காட்ட வெழுந்த ஆவலாற்பிறந்த இப்பாடல் முடிந்தது. பாலைநிலங் கண்ணிற் கெட்டிற்று. வலது கையைக் கவித்து நெற்றிமேல் வைத்து, கடிய பாலை நிலத்தின் கிடக்கையைக் காளை நோக்கினான். ஒரே மணற் காடாய்த் தெரிந்த அந் நிலத்தின் நடுவிற் சில கற்பாறைகளிருந் தன. நிழலென்பதே யில்லா அப்பெருமணற் காட்டில் இந்தப் பாறைகளிடையேதான் சிறிது ஒதுக்கிட மிருந்தது. மறைந் திருந்து வழிப்போக்கரைத் தாக்குவதற்கு இஃது எவ்வளவு பொருத்தமான தென்பதை யறிந்த நம்முடைய பெருமகன், சற்றுத் தாழ்ந்த ஓரிடத்திற்போய் நின்று பார்த்தான். அவன் நின்றவிடத்திற்கு வடக்கே வண்டியோட்டும் ஒருவனது குரல் கேட்டது. ஒப்பிலான், குரலெழுந்த திசைக்கு நேரே கண்களைத் திருப்பினான். அந்த வேளையிற் கற்பாறைகளிடையே யிருந்து திடுக்கிடச் செய்யுமொரு கூச்சலெழுந்தது. அலறித் துடித்த வண்டிக்காரனும், வண்டியின் பிறகே வந்த மற்றொருவனும், வண்டியையே தங்களுக்கு அரணாக வைத்து மறைந்து கொண்ட னர். கள்வர் மற்றுமோர் ஓசை எழுப்பினர். பதிலொன்றும் வண்டிக்காரர்களிட மிருந்து வரவில்லை. “இனி யாது நிகழும் பார்ப்போம்?” என்று ஒப்பிலான் காத்திருந்தான். இரு திறத்தாரும் போர் தொடங்குவார்களாயின், கள்வர் வெல்லா வாறு தடுப்பது தன் கடமை என்று ஒப்பிலான் நினைத்தான். போர் தொடங்கவில்லை. வண்டியின் பிறகே மறைந்தவர் மண்ணிற் புதைந்தனரோ என்றெண்ணுமாறு வாளா கிடந் தனர். இது கண்ட கள்வர், அவர்களுக்கு அறிவு புகட்டக் கருதி, வண்டியின்மீது அம்புமாரி பெய்தனர். வண்டியிற் பூட்டிய எருதுகள் பதறிக் குதித்துத் திகைத்தன. இக்காட்சி ஒப்பி லான் உள்ளத்தை இளக்கிற்று. நாணேற்றி வைத்திருந்த தனது வில்லை அவனெடுத்தான். கற்பாறைகளுக் கிடையே நன்கு அரண்பெற்று நின்ற கள்வர்களை வெளிப்படுத்த ஒப்பிலான் தன் அம்புகளை மேலே செலுத்திக் கற்பாறைகளினிடையே

கீழிறங்குமாறு எய்தான். பத்தில் ஒன்றிரண்டே இவ்வாறு இறங்கின. இங்ஙனம் செய்தால் கடிதில் தன் அம்பறாத் தூணியில் ஒன்றுமிராதென்று கண்டு, ஒப்பிலான் முன்னேறிச் சென்று, கள்வர்கள் பாறைக்குமேல் தலையைக் காட்டவொட்டாது அம்பு தொடுக்கலானான். இத்திறத்தை யுணர்ந்த கள்வர், வண்டியின்மீது இதுகாறுஞ் செலுத்திய கவனத்தை ஒப்பிலான் மீது திருப்பினர். உடல்வலி மிகுந்த ஒப்பிலான் தூரத்தி லிருந்து தங்கள்மேல் அம்பு விடுவதைப்போல் தாங்கள் அவன் மீது வாளி செலுத்த முடியாதென்பதைத் தெற்றெனக் கண்டனர் கள்வர். "இனி இங்கிருந்தால், உயிரிராது" என்று அவர் துணிந்து, பறந்தனர் அவ்விடத்தை விட்டு.

ஒப்பிலான் நகைத்துக்கொண்டே வண்டி நின்ற விடத்திற் கேகினான். ஒளித்துக் கிடந்த இருவரும் எழுந்தோடி வந்து ஒப்பிலானை யடிபணிந்து வாழ்த்தினர். மாடுகளை யவிழ்த்து விடச் சொல்லி, ஒப்பிலான் அவ்விருவருடன் வண்டியின் நிழலி லமர்ந்தான். அவர்களோடு முகமலர்ந்து சில பேசியபின், அவர்கள் அன்போடு கொடுத்த உணவையுண்டு ஒப்பிலான் பாலை நிலத்தைக் கடந்து நடந்தான்.

---

1. அமெரிக்க நாட்டுக் குபேரனென மதிக்கப்படும் ஹென்ரி போர்டு சுருட்டுப் புகைப்பதில்லை.

2. ஆற்றல் சிறந்த இத்தாலியத் தலைவர் பெனிட்டோ முசோலினியும், ஜெர்மன் வல்லரசுத் தலைவரான ஹெர் ஹிட்லரும் சுருட்டும் புகைப்பதில்லை; மதுவும் அருந்துவதில்லை; புலாலும் உண்பதில்லை.

3. அறிவிற் சிறந்த ஆங்கில நூலாசிரியராம் பெர்னார்டு ஷா சுருட்டும் புகைப்பதில்லை, மதுவும் அருந்துவதில்லை, புலாலும் உண்பதில்லை, தேநீரும் அருந்துவதில்லை.

அன்பின் வெற்றி

[வித்துவான் மறை திருநாவுக்கரசு]

திருவாரூரில் வாழ்ந்து வந்த சுந்தரமூர்த்திப் பிள்ளை என்பவர் நல்ல தமிழ்ப் புலவர்; சிவனடியார்; பிறர்க்கு உதவுவதே தம் வாழ்க்கையின் நோக்கம் எனக்கொண்டவர்; யாவரிடத்திலும் அன்பு பாராட்டும் இயல்புடையவர். இக்குணங்களால் இவர் பலராலும் மிகவும் கொண்டாடப்பட்டார். அவ்வூரவரான முனியாண்டி முதலியார் என்பவருந் தமிழ் கற்றவர்; தாம் கற்றது சிறிதேயாயினும் தாம் பெரும் புலவரென்றும், தமக்கெதிர் நிற்க சுந்தரமூர்த்திப் பிள்ளையால் ஆகாது என்றுங் கூறி ஆரவாரஞ் செய்யுங் குணமுடையவர்; வீண் வம்பளப்பதில் வல்லவர்; பொறாமை புலவர்க்கு இயல்பென்று உலகத்தவர் கூறும் பழமொழிக்கு இலக்கணமானவர்; மிகவும் ஏழை. கயவர் சிலர் இவருடன் கூடி வீண் பேச்சுகள் பேசிக் காலங் கடத்துவர். முனியாண்டி முதலியார் சுந்தரமூர்த்திப் புலவரைப் பழிப்பதிலும் அவர் புகழைக் குறைப்பதிலுமே கண்ணுங் கருத்துமாகக் காரியங்கள் செய்துவந்தார். ஊரிலுள்ள நல்லோர் தம் உள்ளத்தில் முன்னவரைப் போற்றியும் பின்னவரைத் தூற்றியும் வந்தனர். முனியாண்டி முதலியார் ஊரிலுள்ள யாரையாவது கண்டால், "என்ன ஐயா! ஊர் கெட்டுக் கிடக்கின்றது? நல்லவர்களுக்கும் உண்மை பேசுகிறவர்களுக்கும் இது காலமில்லை. சுந்தரமூர்த்தி வீட்டுக்குச் சுண்ணாம்பு பூசுவதுபோல உடம்பில் திருநீற்றைப் பூசிக்கொண்டு ஊரை ஏமாற்றுகின்றான். மனதில் சிவபத்தியிருந்தால் போதாதா? வெளிவேடம் எதற்கு? அவர் ஏதோ இரண்டு தேவார திருவாசகங்களைப் பாடிவிட்டால் அவர் பெரிய புலவராகி விடுவாரா? திருக்குறள் எழுதியவர் யார் என்றுகூட அவருக்குத் தெரியாதே? அவரைத்தான் ஊர் கொண்டாடுகின்றது. நானே என் பெருமையைச் சொல்லிக் கொள்ளக்கூடாது. கற்றவர் பெருமை கற்றவர்க்குத்தான் தெரியும்; கயவர்களுக்குத் தெரியுமா?" என்றெல்லாம் வம்பளப்பார். இவருடைய பொறாமைக் குணமும் இழிந்த இயல்புங் கண்ட நல்லோர்கள் இவரிடம் ஒன்றுங் கூறாது போவர். இழிந்தோர்கள் முனியாண்டி முதலியாரின் பேச்சுக்களிலீடுபட்டு சுந்தரமூர்த்திப் புலவரை இகழ்ந்து மகிழ்வர். முனியாண்டி முதலியாரும் அவருடைய பொடி சுருட்டுப் புகையிலை நண்பர்களுந் தம்மை இகழ்வதையும் சமயம் வந்தால் தமக்குக் கேடு செய்ய இருப்பதையும் சுந்தரமூர்த்திப் பிள்ளை

அறிந்தே இருந்தார். என்றாலும் அவர் முனியாண்டி முதலி யாரின் தீய குணங்கட்குப் பெரிதும் வருந்தினார். அவரது வறுமை வாழ்க்கையை எண்ணி எண்ணி மன மிரங்கினார்.

அவர்க்குத் தம்மாலான உதவி செய்யவேண்டு மென்று விரும்பினார். புலவர் இருவரும் ஒருவரை ஒருவர் தனியாகக் கண்டால் அன்புடன் பேசிக்கொள்வதுண்டு. சுந்தரமூர்த்திப் பிள்ளையினிடம் முனியாண்டி முதலியாருக்கு மலைபோற் பொறாமை யிருந்தாலும் பிள்ளையின் உயர்குணமும் அன்பும் நன்றாகத் தெரியும். புலவரிருவரும் இருக்குமிடத்தில் பத்துப் பேர் இருந்துவிட்டால் முனியாண்டி முதலியார் சுந்தரமூர்த்திப் பிள்ளை பேசும் பேச்சில் குற்றங் காண்பதும், கேலி செய்வதும் அவர் ஒன்று மறியாதவரென்று பிறர் எண்ணும்படி வழக்குப் பேசுவதும் குறிப்பாக அவரை வைவதுமாக இருப்பார். இதை யெல்லாம் சுந்தரமூர்த்திப் பிள்ளை பாராட்டாது முதலி யார்மீது மேலும் மேலும் இரக்கங் கொண்டார். ஒரு நாட் காலையில் சுந்தரமூர்த்திப் பிள்ளை காவிரி யாற்றில் நீராடிப் படித்துறையிலிருந்து திருநீறணிந்து திருவைந் தெழுத்தெண்ணி சிவமணி (ருத்ராட்சம்) அணிந்துகொண்டு புறப்பட்டார். அப்போது தம் நண்பர்களுடன் அங்கு வந்த முனியாண்டி முதலியார் பிள்ளையைப் பார்க்காதவர்போல வேறு பக்கமாகத் தம் நண்பர்களைப் பார்த்து, “கொட்டை கட்டிக்கொண்டால் ஊரை ஏமாற்றலாம்” என்றார். குறும்பர்களாகிய அந் நண்பர்கள் கொல்லென்று சிரித்தனர். பிள்ளை இதனை அறியாத வர் போலச் சென்றுவிட்டார்.

ஒருபோது, முனியாண்டி முதலியார் கிழிசல்களுடைய அழுக்கான ஆடையுடன் வீதியிற் செல்வதை சுந்தரமூர்த்திப் பிள்ளை கண்டார்; மனம் நொந்தார். மறுநாள் நடுப்பகலில் முனியாண்டி முதலியாரின் வீட்டிற்கு ஒரு மூட்டையுடன் பிள்ளை வந்தார்; மூட்டையை அவிழ்த்தார். முதலியாருக் காகத் தாம் கொண்டுவந்த ஆடைகளை அவரிடங் கொடுத்து அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அவரை வேண்டி னார். உடனே முதலியார், “என்ன பிள்ளையவாள்! என்னை இப்படியா அவமானஞ் செய்யத் துணிந்து விட்டீர்! உம்மை யார் துணி கேட்டது? உமக்கு வேண்டுமானால் துணி கொடுக்க எனக்குச் சக்தியுண்டு. போம் வெளியே” என்று சினமாகக் கூற, பிள்ளை வெளியேறி விட்டார். தம்மை அவமதிக்கவே பிள்ளை இப்படிச் செய்தார் என்று முதலியார் தவறாக எண் ணினார்.

மற்றொருபோது, முதலியார் உணவில்லாமல் இரண்டு நாட்களாகப் பட்டினி யிருப்பதைப் பிள்ளை கேள்வியுற்றார். ஒரு தட்டில் பழங்களையும் பலவகைத் தின்பண்டங்களையும் நிறைத்தார்; அவற்றுடன் இரண்டு ரூபாய்களும் வைத்தார். அவற்றை எடுத்துக்கொண்டு முதலியாரில்லாத நேரம் பார்த்து அவர் வீட்டுக்குப் போனார் பிள்ளை. ஓரறையில் அவற்றை வைத்துவிட்டுத் திரும்பலானார். முதலியார் இல்லாத சமயம் பார்த்துப் பிள்ளை அவர் வீடுசென்று இவ்வாறு செய்ததேன் என்றால், அவரிருந்தால் முன் தாமீந்த ஆடையை வேண்டா மென்று மறுத்ததுபோல இப்போதும் அவர் அவ்வாறே செய்து பட்டினியிருப்பாரே என்ற பரிவினாலேயாம். வெளியே சென்றிருந்த முதலியார் பசியின் கொடுமையால் நடக்க இய லாதவராகிக் கருதிய இடஞ் செல்லாமல், விரைவில் திரும்பிவீட் டுக்குள் நுழைந்தார். பண்டத்தட்டை அப்போதுதான் அறை யில் வைத்துப் புறப்பட்ட பிள்ளை முதலியாரைக் கண்டதும், "காரியம் கெட்டதே! நாம் கொண்டுவந்ததை இவர் சாப்பிடு வரோ" என்றஞ்சித் திகைத்து நின்றார். முதலியார் பிள்ளையை யும் பண்டத் தட்டையும் அவற்றுடனிருந்த ரூபாய்களையுங் கண்டார். நொடியில் எல்லாவற்றையும் அறிந்தார். பிள்ளையின் பேரன்பை உணர்ந்தார். கண்களிலிருந்து ஊற்றென நீரைக் கொட்டி விம்மி விம்மிக் குழந்தைபோ லழுதார். பிள்ளை அவரைத்தேற்ற முயன்றும் முடியவில்லை. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு முதலியார் பிள்ளையின் குணங்களைக்கொண்டு வறுமை நீங்கி வாழ்ந்தார். தமக்குத் துன்பம் செய்த முதலியாரின் இடைஞ்சல்களாம் படைகளை உண்மை யன்பாற் செய்யப்படும் உதவிகளாம் கருவிகளால் வெற்றிகொண்டார் புலவர் சுந்தர மூர்த்திப் பிள்ளை.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்." (குறள்)

(உனக்குத் துன்பஞ் செய்பவர்கள், வெட்கமடையும்படி அவர்கட்கு வேண்டிய இனிய நன்மையைச் செய். அதுவே நீ அவர்கட்குச் செய்யுந் தண்டனையாகும்.)

உழைப்பு

[போளூர் வித்வான் ஔவை சு. துரைசாமிப் பிள்ளை]

(௨௱௪-ம் பக்கத் தொடர்ச்சி)

பல திறமாய், பல்வகைப் பொருள்களையாக்கி, நாடுகளை நாடா வளமுடையவாகச் செய்து, மக்களை இன்பமும், பொருளும், அறமும், வீடும் இனிது எய்துவித்து, அவர்தம் வாழ்க்கையின் பெரும்பயனை நுகர்விப்பது உழைப்பேயாகும். ஆகவே, உழைப்பே உயிர் என அறிகின்றோம். உயிர் உடலோடு கூடி, வாழ்க்கை நடத்துந்தோறும், அதன்பால் பேரின்பம் பெறுதல்போல, உழைப்பாளியும் உழைக்குந்தோறும் உவட்டாத பேரின்பமும் ஊக்க மிகுதியும் பெறுகின்றான். ஆண்டவன் திருவருள் அவன் உள்ளத்தே ஊறுகிறது. உயர் நோக்கும், ஒள்ளறிவும், பெருந் தன்மையும் அவன்பால் உளவாகி யோங்குகின்றன.

நோன்மை, துணிவு, முயற்சி, அறிவுப் பேற்றின்கண் ஆர்வம், தன்குற்றம் தேர்ந்து கடிதல் முதலியன இன்ப வாழ்வுக்கு ஆக்கமாகும் நல்லறங்கள். உணர்த்த உணர்வதிலும், இவற்றை நாமே நம் உழைப்புவாயிலாக உணர்ந்து நன்னெறிகளிற் செலுத்துவதே நம் உயிர் வாழ்க்கையாகும். உழைப்புவாயிலாக இவற்றை நாம் உணர்தல்வேண்டும். நோன்மை என்பது எத்துணை இடுக்கண்கள் அடுக்கிவரினும் அவற்றிற்கு அழியாது, அவற்றால் வரும் துன்பத்தைப் பொறுத்து மேற்கொள்ளும் தன்மையாகும். அங்ஙனம் மேற்கொள்ளுதற்குரிய துணையாகும் மனத்திட்பமே துணிவு என்பது. துணிந்தவழி, இடையில் வந்து தகையும் இடையூறுகளால் உள்ளமுடையாமல், செய்வினையைக் கடைபோக உழைத்து வெற்றிகாணும் திறம் முயற்சியாகும். அதன்கண் அறியாதனவற்றை அறிந்தாற்றும் விரகு வேண்டியிருத்தலின், அறிவறியும் ஆர்வம் வேண்டுவதாயிற்று. அவ்வார்வத்தால், முதற்கண் தாமே தேர்தலும் பிறர் காட்டக் காண்டலும் ஆகிய இருநெறிகளால் தம் குற்றத்தைக் கண்டு அதனைக் கடிவதும், செய்த குற்றத்தை இனிச் செய்யா வகையில் தம்மைப் பாதுகாத்து, அடுத்த முறையில் நன்காற்றல் வேண்டும் என்னும் நற்பண்புடையனாவதும் உழைப்பாளிக்கு இன்றியமையாதனவாகும். இப் பண்புகளைக் கைக்கொண்டு உழைப்போர்முன், வான்றோய் மலையனைய பேரிடர்கள் வந்து நிற்கும். "நற்செயலுக் கன்றே நானூறு இடையூறு." ஆயினும் உண்மை யுழைப்பாளியோ, எனையவற்றால்

வரும் "இன்பம் விழையான்; இடும்பை இயல் பென்பான்; துன்பம் உறுதல் இலன்." கருமமே கண்ணாக உழைக்கும் அவன், "மெய் வருத்தம் பாரான்; பசி நோக்கான்; கண் துஞ்சான்; எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளான்; செவ்வி யருமையும் பாரான்; அவமதிப்பும் கொள்ளான்." சுடச் சுடரும் பொன்போல், அவன் உள்ளம் துன்பங்கள் தொடர்ந்து போந்து சுடச்சுட, ஒட்பமும் திட்பமும் பெற்று ஓங்கி யொளிரும். நிலவுலகினும், அவன் புகழே ஓங்கிப் பொன்றாது நின்று நிலவும், அத்துன்பங்களும் "எரி முன்னர் வைத்தூறு போலக் கெடும்."

இலண்டன் நகரத்தில் உள்ள செயின்ட் பால் கதீட்ரல என்னும் பெருங்கோயில் உலையா வுழைப்பின் உருவுடைப் பயனாகும். அதனை யெடுத்தற்கு முயன்ற சர் கிறிஸ்தபர் ரென் என்பார், கணிதநூல், வானநூல், சிற்பநூல் முதலியவற்றிற் பெரும் புலமையும் வினைத்திட்பமும் உடையர். ஆயினும், அவர் இதனைக் கட்டியமைத்தற்கு முயன்ற காலத்து உளவாகிய இடையூறுகட்கு அளவேயில்லை. உரோம் நகரத்துச் செயின்ட் பீட்டர்ஸ் பெருங் கோயில் போலவே இக்கோயிலையும் எடுத்தல் வேண்டுமென எண்ணி முயன்ற அவர்தம் எண்ணம் தூர்ந்து போமாறு, அரசியற் பேரதிகாரிகளும் சமயப் பணியாளரும் பிறரும் மண்ணள்ளி எறிந்த வண்ணமே இருந்தனர்; பொருளுதவி புரிவோர் இருளில் மறைந்தனர்; கிறிஸ்தபருக்கும் இடுக்கண் பல அடுக்கி வரலாயின. ஆயினும் என்? "மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற இடுக்கண் இடர்ப்பாடுடைத்து" என்ற திருவள்ளுவப் பெருமொழிபோல, அவ் விடையூறுகளும் இடர்ப்பட்டுத் தாமே யழிந்தன. கதீட்ரல் கண்கவர் வனப்பும் மண்மகிழ் தோற்றமும் பெற்று இன்றும் நின்று நிலவும் பெருஞ் சிறப்புடன் திகழும் செம்மை யெய்திற்று. இன்றும் அதனைக் காண்போர், "பெரியார்" எனப் பொறித்துள்ள பெரும் பெயரைக் காணுந்தோறும், நம் கிறிஸ்தபரின் வினைத்திட்பம், முயற்சி முதலிய வினைமாண்புகளை நினைந்து பாராட்டாநிற்கின்றனர்.

திருவும் கல்வியும் சிறந்து விளங்கும் நாடுகளுள் இப்போது அமெரிக்க நாடு எத்துறையிலும் ஈடுமெடுப்புமின்றி விளங்குவதனை நாம் அறிகின்றோம். இதன் உண்மையினை யுணர்ந்து கண்டு உரைத்த கோலம்பஸ் என்னும் பெரியாரை மேனாட்டவர் அனைவரும், நம் நாட்டவருட் கற்றவரும் நன்கறிவர். நம் நாட்டிற்குப் புதுநெறி யொன்று காணப்புகுந்த அப்பெரியார்

அவ்வமெரிக்க நாட்டினைக் கண்டறிந்தனராயினும், அதனை முதலிற் காண்டற்கண் அவர் உற்ற இடுக்கண் உரைக்குந் தரமுடையதன்று. புதுநெறி காண்டல் கூடுமென்ற எண்ணம் அவர் உள்ளத்திற் புகுந்த நாள்முதல், புதுப்பெரு நாடாகிய அதனைத் தம் கண்களாற் காணுந் துணையும், அவமை, அவமதிப்பு, அச்சுறுத்தல், அறியாமை, இகழ்ச்சி, ஏமாற்றம், வசைவு, கொலை, அச்சம் முதலிய பலசெயல்கள் பல்லாற்றானும் அரித்து அலைத்தன. நாட்டின் காட்சியை யெய்துதற்கு இரண்டொரு நாழிகை யிருக்கும்போதும், அவர் சென்ற வங்கத்திலிருந்தோர் அவரைப் பற்றிக் கொலைசெய்துவிடவும் துணிந்தனர்: மலைபோல் அலையெழுந்து முழங்கும் மறிகடல், முன்னே கிடந்து, மருட்சி விளைவித்தது; பின்னே அவரது நாடு நெடுந்தொலைவிற் கிடந்து, வறிதே திரும்பின் அவரை இகழ்ந்தெள்ளி இன்னற் படுத்தற்கு எதிர்நோக்கியிருந்தது; அருகில் சூழ விருந்தோர் மடித்தவாயும், வெடித்த சொல்லும், கடுத்த நோக்கும் உடையவராய்த் தீவினையே சூழ்ந்துகொண்டிருந்தனர். கணந்தோறும், நிலையின்றிப் புரளும் அலைகள் அவர்தம் கலத்தைச் செலவொட்டாது தடுத்தற் கெழுந்தன போல வெழுந்து அலைப்ப, அவற்றிடையே ஒடுங்கா வுள்ளமும் கலங்காக் கொள்கையு மல்லது பிறிதில்லாத அவர் மனத்திட்பம், அவ்வலைகளின் தலையை மிதித்தேகியது; விரிகடலைச் சுருக்கிற்று; நெடும்போது குறும்போதாக, நீர்க்காற்று நிலக்காற்றாக, பகல் மாய, இரா வணுக, வினை முடிவின் துணைவு மிக, அமெரிக்கப் புது நாட்டின் அடைகரை புலனாயிற்று. அடர்த்தற்கெழுந்த அலைகள் அவரைத் தலைமேற் சுமந்து தாலாட்டின; வன்காற்றாய் மடித்தற்கு நின்ற கடற்காற்று, மென்காற்றாய் அவர் மெலிவு தீர்த்து மகிழ்வித்தது. ஈதன்றோ வினைமாண்பு! என்றும் பொன்றாத இன்பவிசை நல்கும் வினையினும், உழைப்பினும் ஏற்றமுடைய தொன்று உண்டுகொல்! இல்லை! இல்லை! எஞ்ஞான்றும் இல்லை!!

இனி இவ்வுழைப்பினை நம் பண்டைச் சான்றோர் ஆள்வினையென்றே வழங்கி யிருக்கின்றனர். உள்ளத்தின் ஆட்சி வழி நிற்கும் உடல் புரியும் வினை உழைப்பாதலால், அதனை ஆள்வினை யென்றது எத்துணை அழகுடைத்து! காண்மின். அவ்வாள்வினையே ஆடவர்க்கு உயிர் என்பதனால், ஆடவனை ஆண்மகன் என்றல் எத்துணை அறிவுடை மொழி! காண்மின். ஆண்மக்களே! உங்களது ஆண்மை, ஆள்வினையே, அயரா உழைப்பே. அதனையுடைய நீவிர் என் செய்கின்றீர்கள்? அயர்ந்து உறங்குகின்றீர்கொல்? உறங்கன்மின்; உறங்குதல்

ஓய்வுற்றார்க்கே உரியது, ஓய்வு உலையா உழைப்புடையார்க்கே உரியது. உழைப்பவர் ஓய்வு கோடற்குரியர், ஓய்வுற்றவர் உறங்குதற்குரியர் ; உறங்குவோர் மீட்டும் உழைத்தற்கு உடற்கும் உள்ளத்திற்கும் உரந்தருபவராவார். உங்களது உறக்கம் மீட்டும் உழைத்தல் வேண்டி உங்கட்கு ஊக்கம் செய்தற்கமைந்தது ; அதற்குரியபோது இரவுப்போதே. ஆகவே பகற்போது உழைப்புக் குரியதாகும். உழைப்புக்குரிய அப் பகற்போது உறங்குதற்குரிய தன்று ; அதனால் பகற்போதில் நன்கு உழைமின்.

உலகம் விரிந்து கிடக்கின்றது ; இதன்பால் உயரிய பயன் உளது ; உழைப்பவர் அப்பயனை நுகர்தற்குரியர் ; உலகை யளித்த ஒருவன் உங்கட்கு உடம்பு நல்கியுளன் ; அவ்வுடம்பினை உலகில் இயக்கி உறுபயன் பெறுதற்குரிய உறுகருவியாக உங்கட்கு, அவன் உள்ளத்தையும உதவியுளன். உள்ளத்தால் உள்கியவழி உழைத்தற் குரிமையும், ஆற்றலும் உங்கள்பால் உள என்பது விளங்கும். அவற்றை வெளிப்படுத்தல் உங்கள் கடன். ஆற்றலும் உரிமையுமுடைய நீவிர் உழைக்குமிடத்து, எங்கெங்கு முறை பிறழ்ச்சி தோன்றுகின்றதோ, அஃது உங்கள் உயிர்க்கிறுதி பயக்கும் உறுபகையாதலின், அங்கங்கு முறைமையை நிறுவுதல் வேண்டும் ; நெல்விளையும் வயலிடத்துப் புல் முளைய விடுவிர்கொல் ? துரும்பாயினும் விரும்பி யீட்டுமின். பருத்தியின் பஞ்சு காற்றிற் பறக்கும் புன்மைத்தாயினும் விடாது பற்றுமின் ; ஈட்டுமின் ; பாங்குற நூன்மின் ; அஃது அற்றம் மறைக்கும் ஆடையாகுமே ; "அணியெல்லாம் ஆடையின் பின்."

உழைப்பிற்கு ஊறு செய்வன பிறவும் சிலவுள. அவை அறியாமையும், மடமையுமாகும். அறிதற்குரிய அமைதி பெற்றும், அறியவேண்டுவனவற்றை அறியவிடாது, மருட்சியும் அச்சமும் பயப்பித்துச் செயல்வினை சிதறுவித்தலின், அறியாமை உழைப்பிற்கு ஊறு ஆகும். அறிவுடையோர் அறிவுறுப்பவும், ஆற்றற்குரிய வினையும் உரிமையும் அருகில் இருப்பவும், ஆள் வினைக்கண் கருத்தை இருத்தாது, மடிமைக்கண் மடிந்து கிடப்பித்தலின், மடமையினைத் தகர்த்தெறிதலும் ஆண்மகற்கு அறமாகும். அதனைச் செய்யவேண்டு மென்பது ஆண்டவன் ஆணை. "இன்று," "இப்போழுது," "இக்கணம்" என்று வழங்கும் காலமே, அதனை அயராது ஆற்றற்கமைந்த அருமைக் காலமாகும். அயர்ந்தவழி இரவு வந்துவிடும் ; அக்காலத்தில் எவரும் உறங்குவரே யன்றி உழைத்தலைச் செய்யார்.

எல்லா வகை உழைப்பும் ஏற்றமுடையனவாகும்; அவற்றுள் கையால் உழைக்கும் உழைப்பில் கடவுட்டன்மை யுண்டு எனக் கார்லைல் என்னும் பெரியார் கனிஎனக் கூறுகின்றார்; இக் கட்டுரைக்கண் அடங்கிய கருத்துக்களை வழங்கிய பெரும் புலவரும் அவரே. உழைப்பு உலகேபோல் பரந்த பண்பினையுடையது; இதன் உயர்வு வீட்டுலகின் உச்சியிலுளது. முதற்கண் உடலிலும், பின் மூளையிலும், முடிவில் உள்ளத்திலும் ஒன்றியுலவிப் பயன் உறுவிக்கும் உழைப்பே, கேப்ளர் கண்ட கோணிலைக் கணக்கும், நியூட்டன் நிகழ்த்திய நெடும் பொருளாராய்ச்சியும், அறிவியற்கலைகளும், ஆண்மைச் செயல்களும் இன்னுயிர் வழங்கி இசை நடும் இயல்பும் யாவும் தோற்றுவித்த ஏற்றமுடையது. ஆதலால், ஆண் கடன் இறுக்கும் மாண்புடை மக்காள்! உழைப்பே ஆண்டவன் உருவென வுணர்மின். அதற்கு அழியாத ஆற்றலே அவனது திருப்பணியென அறிமின்; பரந்த உலகில் சிறந்தோங்கிய பெருமக்கள் கண்டுணர்ந் துரைத்த முதுபொருளும் இதுவேயாம்.

உழைப்பினை வெறுத்து நொந்துரைக்கும் ஒருவன் உளனோ? உளனாயின், அவனை அது செய்யவேண்டாவென உரைமின். ஒடுங்கிக்கிடக்கும் அவன் முன் சென்று, "அன்ப, ஒடுங்குதல் ஒழிக. இதோ, உன்போல் உழைத்த தோழர்கள் உயர் நிலை யுலகத்தில் இன்பஞ் சிறந்து இனிதே உறைகின்றனர். அவர்களன்றோ ஆங்கே இன்புறுகின்றவர்; பிறர் எவரும் இலரே! இந் நிலவுலகினும், உழைப்புநலத்தால் உயர்ந்தவரன்றோ, மக்கள் மனநிலத்தில் மன்னி, வானவரும் முனிவரரும் போலக் காலங்கழியினும் கோலங் கழியாது என்றும் நின்று நிலவுகின்றனர்," எனத் தெருட்டித் தெளிவுறுத்துமின்.

டோக்கியோப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஹிரோஷி நகமுரா என்ற ஜப்பானியப் பேராசிரியர் சூடற்ற ஒளியை உண்டுபண்ணும் புதுமுறையைக் கண்டுபிடித்துள்ளார்.

வியாசம்*

[திரு. ஆர். பி. சேதுப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.]

இவ்வுலகில் வீரர் கையாளும் வில்லின் ஆற்றல் பெரிதோ? அறிஞர் வாய்ச்சொல்லின் ஆற்றல் பெரிதோ? என்னும் வினவிற்கு விடை கூறுதல் எளிதன்று. எழுதுகோல் பிடிக்கும் கையினும் இலங்கு வாள் ஓச்சும் கையே வலிமை சான்றது என்பர் ஒருசாரார். அரசியலை நடத்தும் கோல் அறிஞர் தம் எழுதுகோலே என்பர் மற்றொரு சாரார். கருத்து வேற்றுமைக்கு இடந்தரும் இப்பொருளை நன்கு ஆராய்ந்து தமிழ் நாடு பண்டே விடை கொண்டது. வில்லாளரினும் சொல்லாளரே வலியர் என்று **திருவள்ளுவர்** திட்பமாகக் கூறினர். "வில்லேருழவர் பகைகொளினும் கொள்ளற்க, சொல்லேருழவர் பகை" என்பது **திருவள்ளுவர்** வாய்மொழியாகும். இக் கருத்தைக் **கம்ப**ரும் ஆதரிக்கின்றார்.

இத்தகைய ஆற்றல் வாய்ந்த சொல்லைக் கட்டுரை என்று பாராட்டினர் தமிழறிஞர். பொருள் பொதிந்த சொல் கட்டுரையாகும். கட்டுரை பாட்டு வடிவிலும் அமையலாம்; வசனமாகவும் விளங்கலாம். பழந்தமிழ் நாட்டில் பாட்டு வடிவத்தில் எழுந்த கட்டுரை பலவாகும். திருவள்ளுவர் அருளிய திருக்குறளில் அறத்தின் தன்மையைக் குறித்தும், அரசியலைக் குறித்தும், இன்பத்துறைகளைக் குறித்தும் அருமையான பல கட்டுரைகள் அமைந்திருக்கக் காண்கிறோம். திருக்குறளிலுள்ள கட்டுரைகள் செப்பமும் திட்பமும் வாய்ந்து விளங்குகின்றன. திருவள்ளுவர் கட்டுரையின் திறங் கண்ட தமிழ் அறிஞர் "கடுகைத் துளைத்து எழுகடலைப் புகுத்துக் குறுகத் தரித்த குறள்" என்று புகழ்ந்து போற்றினர். திருவள்ளுவர் வழங்கிய தெள்ளிய சொற்கோவைகளை எடுத்தாளாத தமிழ்ப்பாட்டும் இல்லை, உரையும் இல்லை என்பது மிகையாகாது. கட்டுரை வகையில் திருக்குறளோடு ஒத்த பெருமை **நாலடியார்க்கு** உண்டு. "ஆலும் வேலும் பல்லுக்குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்னும் **பழமொழியால்** இவ்வுண்மை நன்கு விளங்கும்.

சென்ற இருநூற்றாண்டுகளாகத் தமிழ் வசனம் பல துறைகளிலும் வளர்ந்தோங்கி வருகின்றது. ஆங்கிலப் பயிற்சி இவ் வளர்ச்சிக்கு ஆதரவாய் அமைந்துள்ளது. ஆங்கில இலக்கிய

---

*இது திருச்சி வானொலி பரப்பியில் பேசப்பட்டது.

வகைகளைப் பின்பற்றித் தமிழில் வசன நூல்கள் எழுதப்படு கின்றன. வியாசம் என்னும் இலக்கிய வகை ஆங்கிலத்தில் "எஸ்ஸே" எனப்படும் மேலை நாட்டில் "எஸ்ஸே" பிறந்து வளர்ந்து வரும் முறை இலக்கிய வரலாற்றால் இனிது விளங்கு கின்றது. சுமார் முன்னூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு **மாங்தேன்** என்னும் பிரஞ்சு அறிஞர் தாம் எழுதிய குறிப்பு களை "எஸ்ஸே" என்னும் பெயரால் வெளியிட்டார். அவர் கையாண்ட சொல்லின் நலமறிந்த ஆங்கில அறிஞர், அதனை ஏற்று எடுத்தாளத் தொடங்கினர். **பேக்கன்** என்னும் புலவர் பெருமான் தாமெழுதிய உயரிய கட்டுரைகளுக்கு 'எஸ்ஸே' என்று பெயரிட்டார். எனினும், பேக்கன் எழுதிய கட்டுரை முறைக்கும் மாங்தேன் எழுதிய வியாசமுறைக்கும் வேற்றுமை யுண்டு. பேக்கன் முறை திருவள்ளுவர் முறையை ஒத்திருக் கின்றது என்னலாம். இருவர் கட்டுரையிலும் அரிய கருத்து இறுகிய நடையில் எழுதப்பட்டுள்ளது. செப்பமுற வகுத் துரைக்கும் முறை இருவரிடமும் காணப்படுகின்றது. திரு வள்ளுவர் பாட்டில் எழுதினார்; பேக்கன் வசனத்தில் எழுதி னார். இதுவே வேற்றுமை.

ஆதியில் 'மாங்தேன்' காட்டிய நெறியைப் பின்பற்றிய ஆங்கில அறிஞரும் உண்டு; தமிழறிஞரும் உண்டு. ஆபிரகாம் கவுலி முதலாய ஆங்கில அறிஞர் மாங்தேன் முறையைத் தழுவி எழுதினர். இனிய எளிய தமிழ்ப் பாட்டை இசைத்துத் தமிழ் நாட்டைத் தட்டி எழுப்பிய பாரதியார் எழுதிய வியாசங்களி லும் அம்முறை கையாளப்பட்டிருக்கின்றது. பாரதியார் வியா சங்களில் உணர்தற்கரிய கருத்துக்கள் இல்லை; இறுக்கமான நடையில்லை; செப்பமுற வகுத்த முறையில்லை. அவர் வியாசம் செவ்விய நறுமலர்களால் ஒழுங்காகக் கட்டப்பட்ட மாலை போன்றதன்று. உதிர்ந்த பூக்களை அள்ளி எறிவதுபோல் அவர் தம் மனத்தில் எழுந்த கருத்துக்களை வியாசங்களில் எடுத்து வீசுகின்றார். அவ்வியாசங்களில் ஆசிரியரது சுயசரி தைக் குறிப்புக் காணப்படும். அதற்கு இரண்டொரு சான்று காட்டுவோம். 'ஞான ரதம்' என்பது பாரதியார் எழுதிய வியாசங்களுள் ஒன்று. ஞானம் என்னும் ரதத்தில் ஏறிப் பல வுலகிற்குச் சென்று ஆங்காங்கு அவர் கண்ட காட்சிகளைக் குறிக்கும் பான்மையில் அமைந்தது அவ்வியாசம். ஞானரதம் புறப்பட்டு முதலில் கவலையற்ற உபசாந்திலோகத்திற்குச் செல் கின்றது. அங்கிருந்து இன்பம் நிறைந்த கந்தர்வ லோகத் திற்குப் போகின்றது. பிறகு சத்தியலோகத்திற்குச் செல் கின்றது. பின்னர் மண்ணுலகத்திற்கு மீள்கின்றது. அப்பால்

அறம் நிரம்பிய தர்ம லோகத்திற்குப் போகின்றது. இத்தகைய ஞான ரதத்தில் பாரதியார் தமது மண்ணுலக வாழ்க்கையைக் குறித்துக் கூறுவதைக் கேளுங்கள்.

"கந்தர்வ நாட்டைப் பற்றிக் கேட்டீர்களே! இந்த மண்ணுலகத்தில் நமக்கு உள்ள சௌகரியங்களைப்பற்றிச் சிறிது கேளுங்கள். எனக்குத் தலைநோவு பலமாய் இருந்தது. ஏதோ பெயர் மறந்துபோன தெருவில் நான் கூலி கொடுத்து வாசம் செய்து கொண்டிருந்த வீட்டுக்கு வந்து சேர்ந்தேன். அங்கே எனது அறையின் வெளிப்புறத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு என் மனைவியைக் கூப்பிட்டேன். அவள் வந்து "ஏன்?" என்றாள். தலைநோவு பொறுக்க முடியவில்லை; கொஞ்சம் மிளகு அரைத்துக் கொண்டுவா என்றேன். "ஆமாம், இரண்டு ஒரு நாளைக்கு முறை இதொரு பொய்த் தலைவலி வந்து விடும், என்னை வேலை ஏவுகிறதற்காக, இதெல்லாம் சரிதான். பால்காரி வந்து மத்யானம் பணம் கேட்டு விட்டுப் போனாள். ராயர் வீட்டு அம்மாள் குடிக்கூலிக்கு ஞாபகப்படுத்தச் சொன்னாள். இந்த மாதம் குழந்தைக்குக் காப்பு வாங்க ரூபாய் தருவதாகச் சொல்லியிருந்தீர்கள். என்னைத்தான் ஏமாற்றுகிறது வழக்கமாகவே போய்விட்டது." இன்னும் அது இது என்று ஆயிரம் கணக்குச் சொன்னாள். அன்று மாலை அவள் சொல்லிய கணக்குகளை யெல்லாம் தீர்க்க வேண்டுமானால் குறைந்த பக்ஷம் மூன்று லக்ஷ ரூபாய் வேண்டுமென்று என் புத்திக்குப் பட்டது. கடைசியாகத் "தெருவிலே போகிற நாய்களுக்கெல்லாம் பணத்தை வாரியிறைக்கிறது, வீட்டுச் செலவைப் பற்றிக் கேட்டால் முகத்தைச் சுளிக்கிறது. இப்படிச் செய்துகொண்டே வந்தால் அப்புறம் என்ன கிடைக்கும்" என்று ஆசீர்வாதம் பண்ணிப் பிரசங்கத்தை முடித்தாள். "தலைநோவு தீர்ந்துபோய் விட்டது. நீ தயவு செய்து கீழே போகலாம்" என்று வணக்கத்துடன் தெரியப்படுத்திக் கொண்டேன்.

இந்த ரஸமான வாழ்க்கைக் குறிப்புக்குப் பின், பாரதியார் நகைச்சுவைபடக் கூறும் மற்றொரு செய்தியைக் கேளுங்கள்.

"வீட்டு வர்த்தமானங்களையும் எனது சொந்தமான வர்த்தமானங்களையும் குறித்து சில திருஷ்டாந்தங்கள் காண்பித்தேன். இனி வெளி வியாபாரங்கள், எனது மித்திரர், அயலார் முதலியவர்களின் செய்திகள் சம்பந்தமாகச் சில திருஷ்டாந்தங்கள் காண்பிவிக்கிறேன். திருவல்லிக்கேணியிலே ஒரு தேச பக்தர் சபையுண்டு. அதில் தேச பக்தர்கள்தான் கிடையாது.

நானும் சில ஐயங்கார்களும் சேர்ந்து "காரியங்கள்"—ஒரு காரியமும் நடக்கவில்லை.—நடத்தினோம். நான் சோம்பேறிக் குத் தொண்டன். என் நண்பர்களெல்லாம் சோற்றுக்குத் தொண்டர்கள். சிலர் மட்டிலும் பணத்தொண்டர். காலணு வின் அடியார்க்கும் அடியார்; ஆனால் எங்களிலே ஒவ்வொரு வனும் பேசுவதைக் கேட்டால் கைகால் நடுங்கும்படியாக இருக் கும். பணத் தொண்டரடிப்பொடி ஆழ்வார் எங்கள் எல் லோரைக் காட்டிலும் வாய்ப்பேச்சில் வீரர். ஒருவன் வானத்தை வில்லாக வளைக்கலாம் என்பான். மற்றொருவன் மணலைக் கயிறாகத் திரிக்கலாம் என்பான். ஒருவன் நாம் இந்த ரேட்டில் வேலை செய்துகொண்டு வந்தால் ஆங்கிலேயரின் வர்த்தகப் பெருமை ஆறு மாதத்தில் காற்றாய்ப் போய்விடும் என்பான்.

பணத்தொண்டரடிப்பொடி ஆழ்வார் எங்களிலே முக்கி யஸ்தர். அவர் இதை எல்லாம் கேட்டுப் பரமானந்தம் அடைந்துகொண்டிருப்பார். ஆனால் ஒரு தேவதை அவரி டம் வந்து உங்களுக்கு நான் ஸ்வராஜ்யம் நாளை சூரிய உதயத் திற்கு முன்பு சம்பாதித்துக் கொடுக்கிறேன். நீ உன் வீட்டி லிருந்து அதற்காக ஒரு வராகன் எடுத்துக்கொண்டுவா என்று சொல்லுமாயின், அந்த ஆழ்வார், தேவதையே, உனக்கு வந்தனம். செய்கிறேன். ஓம் சக்தியே நம, அம்பிகே, இந்த உபகாரத்திற்கு நாங்கள் உனக்கு எவ்வாறு நன்றி செலுத்தப் போகிறோம். எங்கள் உடல் பொருள் ஆவி மூன்றும் உன்னுடையதே யாகும். ஆனால் ஒரு வராகன் கேட்ட விஷயத்தைப் பற்றி நான் ஒரு வார்த்தை வணக்கத் துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதைக் கேள். நீ சொல்லுகிற காரியமோ பொதுக்காரியம். அதற்குப் பொது ஜனங்கள் பணம் சேர்த்துக் கொடுப்பதே பொருத்தமுடைய தாகும். நான் ஒருவன் மட்டிலும் கையிலிருந்து பணம் செலவிடுதல் பொருத்தமன்று. இவ்விஷயத்தைப் பற்றி நாங் கள் அடுத்த வாரம் கூடப்போகிற மீட்டிங்கில் பேசித் தீர் மானம் செய்கிறோம். அதன் பிறகு நீ பெருங் கருணையுடன் எழுந்தருளவேண்டும். இப்போது போய்வருக. என்று மறு மொழி சொல்லி அனுப்பி விடுவார்."

இவ்வளவில் ஞானரதத்திற்கு விடை கொடுத்துவிட்டு, பாரதியார் எழுதியுள்ள "தராசு" என்னும் வியாசத்தைப் பார்ப்போம். அவர் 'தராசு' எல்லா வஸ்துக்களையும் நிறுத் துப் பார்க்கின்றது. ஐரோப்பா வைத்தியம் முதலாக அன்னி பெஸண்டு அம்மையார் நிறுவிய ஹோம் ரூல் கட்சி ஈறாகப்

பலதிறப்பட்ட பொருள்கள் தராசில் நிறையிடப் படுகின்றன. தராசின் வாயிலாக பாரதியார் சில போலிக் கொள்கைகளை பரிகசிக்கின்றார். ஆங்கில மோகங்கொண்ட ஒருவர் தராசைக் கண்டு உரையாடியதைக் கேளுங்கள். "மைசூரிலிருந்து நம்முடைய கடைக்கு ஒருவர் வந்தார். என்ன தொழில் என்று கேட்டேன். சமாசாரப் பத்திரிகைகளுக்கு விஷய தானம் செய்து ஜீவிக்கிறேன் என்று இங்லீஷில் மறுமொழி சொன்னார். இவருக்குத் தமிழ் தெரியாதோ என்று தராசு கேட்டது. அவர் சொன்னார். தமிழ் தெரியும்; நெடுங்காலம் கன்னட தேசத்திலே பழகினபடியால் தமிழ் கொச்சையாக வரும். அதனால் இங்கிலீஷில் பேசுகிறேன்."

தராசு சொல்லுகிறது. கொச்சையாக இருந்தால் பெரிய காரியமில்லை. சும்மா தமிழிலே சொல்லும்.

இவ்வாறு தராசின் வாயிலாகத் தமது தமிழார்வத்தைப் பாரதியார் காட்டுகின்றார். இயன்றவரை தமிழே பேசுவேன். தமிழே எழுதுவேன். சிந்தனை செய்வதும் தமிழிலே செய்வேன். என்பது அவருடைய சங்கற்பங்களுள் ஒன்று.

முற்காலத்தில் கட்டுரை யென்னும் சொல்லுக்கு அடியார்க்கு நல்லார் போன்ற உரையாசிரியர்கள் உரைத்த பொருளை முன்னமே கண்டோம். தற்காலத்தில் கட்டுரை என்னும் சொல் மிக விரிந்த பொருளில் வழங்குகின்றது. வசன ரூபமாக எழுதப்படும் வியாசங்கள் எல்லாம் பெரும்பாலும் அச்சொல்லாற் குறிக்கப்படுகின்றன. கம்பன் கவிதையைப் பற்றிய ஆராய்ச்சியும் கட்டுரை. கட்டெறும்பைப் பற்றிய வியாசமும் கட்டுரையே. புத்தக உலகத்தில் இத்தனைக் கட்டுரை, தனித்தமிழ்க் கட்டுரை, கலைபயில் கட்டுரை, சிந்தனைக் கட்டுரை, ஆராய்ச்சிக் கட்டுரை முதலிய பெயர்கள் இன்று வழங்கக் காண்கிறோம். ஆங்கிலத்திலும் எஸ்ஸே என்ற சொல் பொதுவாக எல்லா வகையான வியாசங்களையும் இன்று உணர்த்துகின்றது. எனினும் தமிழில் ஒரே பொருளைக் குறிக்கும் வியாசம் கட்டுரை என்னும் இருசொற்களையும் ஆட்சியில் வரையறுத்து வழங்குதல் நன்றென்று தோன்றுகிறது. வசன நடையில் அரிய கருத்துக்களை நிரல்படக் கோத்து வரன்முறையாக எழுதப்படுவனவற்றைக் கட்டுரை என்றும், மேற்சொல்லிய ஞான ரதம், தராசு இவற்றின் போக்கைப் பின்பற்றி எழுதப்படும் உரைநடையை வியாசம் என்றும் வழங்குதல் நன்றன்றோ என்பதை ஆராயுமாறு தமிழ் அறிஞரை வேண்டிக் கொள்ளுகின்றேன்.

நறுவீ முல்லை

துறவறமாவது இல்லறத்தின் வழுவாது ஒழுகி அறிவுடையராய்ப் பிறப்பினை அஞ்சி வீடுபேற்றின் பொருட்டுத் துறந்தார்க்கு உரித்தாய அறம்.

* * *

துறவறந்தான் வினைமாசு தீர்ந்து அந்தக்கரணங்கள் தூயவாதற்பொருட்டு அவராற் காக்கப்படும் விரதங்களும் அவற்றான் அவை தூயவாயவழி உதிப்பதாய ஞானமுமென இருவகைப்படும்.

* * *

விரதங்களாவன இன்னவறஞ் செய்வலெனவும் இன்ன பாவம் ஒழிவலெனவும் தம் மாற்றலுக்கேற்ப வரைந்து கொள்வன.

* * *

(அருளுடைமையாவது) தொடர்பு பற்றாது இயல்பாக எல்லா உயிர்கண்மேலுஞ் செல்வதாகிய கருணை.

* * *

இல்லறத்திற்கு அன்புடைமைபோல அருளுடைமை துறவறத்திற்குச் சிறந்தது

* * *

உயர்ந்தார்கண்ணேயல்லது இல்லாத அருட்செல்வமே சிறப்புடைய செல்வம்; ஏனை நீசர்கண்ணு முளவாம் பொருட் செல்வங்கள் சிறப்பில.

* * *

அளவைகளாவன, பொறிகளாற் காணுங் காட்சியும், குறிகளானுய்த்துணரும் அனுமானமும், கருத்தா மொழியாகிய ஆகமுமென மூன்று. ஒப்புப் பற்றிவரும் உவமையும், இங்ஙன மன்றாயின் இது கூடாதென்றுணரும் அருத்தாபத்தியும், உண்மைக்கு மாறாய இன்மையுமென இவற்றைக் கூட்டி ஆறென்பாருமுளர். இவையும் ஒருவாற்றான் அவற்றுள்ளே அடங்குதலின் மூன்றென்றலே கருத்து.

* * *

சான்றோர் தாங் கண்டு தேறிய பொருளைக் காணாதார்க்குத் தேற்றுதற் குரியவர்.

* * *

நிலைபெற்ற ஞானமில்லாதவன் இடையே மெய்ப்பொருளையுணர்ந்தால் அதனைத் தன் ஞானமின்மையால் தானே யழித்துவிடும்; அதுபோல அருளாதான் இடையே அறஞ்செய்தால் அதனைத் தன்னருளாமையால் தானே யழித்துவிடும்.

* * *

பொருட் பயனிழத்தற்குக் காரணம் காவாமை; அருட் பயனிழத்தற்கு ஊன்தினல்.

* * *

தவமாவது மனம் பொறிவழி போகாது நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கலும், கோடைக்கண் வெயினிலை நிற்றலும்,

மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு, அவற்றுற் றம்முயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்துப் பிறவுயிர்களை யோம்புதல்.

—பரிமேலழகர்.

* * *

வேட்கை யென்பது என்னென்னுனின் ஒருவர் ஒருவரை இன்றியமையாமை.

* * *

வேட்கை எல்லா உணர்வினையும் நீக்கித் தானேயாய், நாண்வழிக் காசுபோலவும், நீர்வழி மிதவைபோலவும், பான்மை வழியோடி இருவரையும் புணர்விக்கும்.

முயற்சியும் உளப்பாடும் இன்றி ஒருவற்கு ஒரு கருமம் கைகூடின விடத்துத் தெய்வத்தினுன் ஆயிற்று என்ப.

* * *

பிரிவு அன்பிற்கு மறுதலை.

* * *

மென்மை என்பது பெண்டிர்க்கு மிக்க இயல்பு.

* * *

செம்மை யுடையார் என்பது உலகத்துத் தம் குணங்களை மறையாது ஒழுகுவாரை.

* * *

உலகத்து இவை உவமை, இவை உவமிக்கப்படும் பொருள் என்று நிலைபெற்றன உளவே யில்லை. உரைக்குங் கவியது குறிப்பினுன் உவமையும் உவமிக்கப்படும் பொருளாம்; உவமிக்கப்படும் பொருளே உவமையாகவும் அமையும்.

* * *

சிறியவரும் தம்முன்னின்று தம்மைப் புகழ்ந்தவிடத்து நாணி வருந்துப.

* * *

நீருடை நிலத்து நிவந்த நீண்மரம் வெப்பத்தால் தெறப்படாதது போல.

* * *

ஆற்றுத் தன்மையன் என்பது எவ்வுணர்வும் இன்றி அவ்வாற்றுமை தானேயாவது.

* * *

வேலேறுபடத் தேளேறு மாய்ந்தாற்போல.

* * *

(தலைமகள்) கருங் குழற்கற்றை மருங்கு திருத்தி, அளகமும் நுதலும் தகைபெற நீவி, ஆகமும் தோளும் அணிபெறத் தைவந்து, குளிர்ப்பக் கூறித் தளிர்ப்ப முயங்கிப் பிரிவல் எனத் (தலைமகன்) வலித்தான்.

கார் மருங்கின் மின்னுப்போலவும், நீர் மருங்கிற் கொடிப்போலவும், தளிரும் முறியும் ததைந்து, குளிரும் நளிரும் கவினி எழாநின்றதோர் கொடிப்போலும் காரிகை.

* * *

கண்ணாடி மண்டிலத்து ஊதுஆவிபோலக் காண ஒளி மழுங்கிக் கனல்முன் இட்ட மெழுகுப் பாவைபோல மனம் உருகிப் பசந்து காட்டினள்.

—இறையனார்.

* * *

முத்துச் சிப்பியில் உள்ள முத்தின் ஒளியும், பாசி மூடிய பவளத்தின் நிறமும், மாசியில் மறைந்த மதியின் துலக்கமுங் கூடை கவிழ்ந்த விளக்கின் ஒளியும்போல் நம்மை மூடிக்கொண்டிருக்கும் அறியாமை.

* * *

கல்வி ஒன்றுமே உயிர்க்கு நேரே பயன்படுவதா மென்பதுங் கைத்தொழிலோ உடம்பிற்கு மட்டும் நேரே பயன்படுவதாமென்பதும் அறிதல் வேண்டும்.

* * *

கல்வி யறிவின் உதவிகொண்டு செய்யப்படும் எல்லாக் கைத்தொழில் முயற்சிகளும் உழவு, நெசவு, வாணிகம் என்னும் மூன்று பகுதியிலே அடங்கும்.

* * *

தீவினை ஒரு சிறிதுமில்லாத் தொழில் எதுவென்று ஆராயுமிடத்து அது நெய்தற் றொழிலாகவே இருத்தலால், அவ்வகையில் அஃது உழவுத் தொழிலினும் மேலானதென்றே கொள்ளப்படும்.

* * *

நாகரிகம் வாய்ந்த எந்த மொழியும் பிறமொழிக் கலப்பில்லாமல் இருத்தல் இயலாது.

* * *

இருவர் தமக்குள் தோன்றிய நேசத்தால் ஒருங்கு ஒட்டி உயிர் வாழவேண்டுமேயல்லாமல் பிறரால் வலிந்து பொருத்தப்பட்டு அவர் ஒன்றுபட்டிருத்தல் இசையாது. இவ்வியல்பு மொழிகளின் சேர்க்கையிலும் பிறழாமல் அமைந்திருப்ப தொன்றும்.

* * *

கல்வி யறிவும் நாகரிகமும் வாய்ந்தவர்கள் பிறநாட்டுச் சொற்களை எடுத்து வழங்க வேண்டிய இடங்களிலும் அவற்றிற்கு ஈடாகத் தமது மொழியிலுள்ள சொற்களையே நடைபெறவிட்டு வாழ்வர்.

* * *

முயற்சியும் உண்மையான பற்றும் இல்லாதவர்கள் பிறமொழி பேசுவோருடன் கலந்தால் தமது மொழிச்சொற்களை விட்டுப் பிற சொற்களையே எளிதில் எடுத்தாளத் தலைப்படுவார்கள்.

முயற்சியும் அறிவும் உடையவர்கள் கருத்து வைத்தால் எத்தகைய புதுப் பொருட்களுக்குந் தமிழிலேயே பெயரமைக்கலாம்.

* * *

உலகவழக்கிற் பெண்டிர் சிறார் முதலான எத்திறத்தாரானும் பேசுதற்கு இயைந்த எளிய தன்மையுந், தன்னைக் கற்பார்க்கு இனியனவாய்க் காணப்படும் இயற்கைப் பொருத்தமுள்ள சொன்முடிபு பொருண்முடிபுகளும் வாய்ந்து பல்லாயிர ஆண்டுகளாக இளமை குன்றாமல் வழங்கிவரும் அருமை பெருமை மிக்க செந்தமிழ் மொழியில் வேண்டா கூறலாய் ஆரியம் ஆங்கிலம் முதலான பிறமொழிச் சொற்களைக் கொண்டுவந்து நுழைத்தல் பெரிதுங் குற்றமாவதாம்.

* * *

வேண்டா வழக்காய் உருவு திரியாமல் தமிழில் வரையப்படும் வேற்றுமொழிச் சொற்கள் உண்மைத் தமிழறிஞர்க்குப் பெரியதொரு வருத்தத்தினையும் அருவருப்பினையும் விளைக்கின்றன.

—மறைமலை யடிகள்.

மை ஆறு

அல்ஜீரியா நாட்டில் மைபோன்ற கரிய நீருடையதாய் ஓராறு ஓடுகின்றது. அந்நீரைத் தொட்டு எழுதக் கூடிய வகையில் நீர் கனமுடைத்தா யிருக்கின்றது. மை சேர்க்க உதவும் பொருண்மை அந்நீரிற் கலந்துள்ளது. அந்த ஆற்றிற்கு இரண்டு ஊற்றுகளிலிருந்து நீர் பெருகி வருகிறது. ஓர் ஊற்றிலிருந்து வரும் நீர் அன்ன பேதிச் சத்துடையது; மற்றோர் ஊற்றிலிருந்து வருவதோ கடுக்காய்ச் சத்துடையது; இதுவே "இங்கி" யென்னும் மை ஆறாக அந்த ஆறு இருப்பதற்குக் காரணம்போலும்.

—(லோகோபகாரி.)

வல்லரசு

(கோபாலை. நெல்லையப்பன்)

(பதிப்புரிமை ஆக்கியோனுக்கே)

காட்சி க.

இளங்கோ துறவு

(அத்தாணி மண்டபத்தில் அமைச்சர் புடைசூழ இமயவரம்பன் நெடுஞ் சேரலாதன் வீற்றிருக்கின்றான்)

இமயவரம்பன் :—நீதிவிடாது நின்றுரைக்கும் நேர்மையுள்ள அமைச்சர்களே! ஆன்றோர்களே! உங்கள் உறுதுணை கொண்டு யான் இதுகாறும் திறம்பட ஆட்சி புரிந்தேன். மும்மையு முணரவல்ல நுந்தம் மொழிவழி நின்று யான் ஐம்பத்தெட் டாண்டளவும் அரசு செலுத்தினேன். இற்றைநாள்வரை யான் மன்னுயிர்க்குறுவதே செய்தே னன்றி என்னுயிர்க்குறுவது செய்யவு மெண்ணிலேன். விண்ணோர்காறும் வென்ற யான் இவ்வைம்புலன்களையு மடக்கியாளும் தவத்தைக் கைக்கொள மனவுறுதி கொண்டுளேன். இனி என்னால் அரசுச் சுமையைத் தாங்குதல் இயலாத காரியமாகும். எனக்கோ நரைமுதிர் மூப்பு வந்தெய்தி விட்டது. பிறப்பென்னும் பெருங்கடலை நீந்து வதற்குத் துறப்பென்னும் அரும்புணையைக் கைக்கொள அவா வுடையேன். பிறந்தவர் யாவரும் இறப்பதுறுதி யென்னும் பெற்றியை மறந்தால் அதைவிட மனிதனுறுங் கேடு பிறிதொன்றுமில்லை. இம்மையிலறத்துடன் அரசு நடாத்த உதவிய நீவிர் யான் அம்மையிலறத்தைச் செய் வதற்குப் பெரிது முதவுதல் வேண்டும். ஆகவே யான் இவ் வரசைக் கைவிட்டு உயிர்க்குறுதி பயப்பன வற்றைச் செய்ய முற்படுவல், அமைச்சரீஇர்; அதுபற்றி நுங்கள் கருத்து யாது?

விறல்வேள்:—இமயவரையில் இலாஞ்சனையைப் பொறித்த ஏந்தலே! நீ நீடூழி வாழ்க! இவண் வெளியிடப்பட்ட நும் கருத்து எம்மனோர்க்குப் பொருத்த முடையதே. நும் போன்றோர்க் குரிய செயலும் அஃதேயாம். தங்கள் பெருந் திறல் முன்னோரும் இவ்விதமே தங்களரசைத் தங்கள் தோன்றல்கட்கு முடிசூட்டிவிட்டுக் கடுந்தவமியற்றி வீடு பேறடைந்தனர். அவர்கள் வழிவழி தோன்றிய நீயும் நின்

பெருமைக்கும், அருமைக்கும், மரபிற்கும் உரிய கருமத்தைக் கைக் கொள்ளுவது சாலவும் பொருந்திய முறையேயாம். தங்கள் எண்ணம் ஈடேறுவதாக! ஆனால் அரசரேறே! இத்தெண் கடல் வளாகத்தை வெண்குடை நிழற்றும் உரிமையை நம் மக்களுள் யாவரோ பெறுதற் குரியர்?

இமயவரம்பன்:—திருந்திய நன்மொழிக் கிழவோய்! இம்மணிமுடியைத் தாங்குவதற்குத் தகுதியுடையவன் நம் செங்குட்டுவ னன்றோ? அவனே இந்நாட்டை யாள்வான். நீவிர் எல்லீருடைய பெருந்துணையினுறு முயற்சியும், இறைவ னின்னருளும் கைகூட்டுமாயின் செங்குட்டுவனரசியல் பிழைத்தலு முண்டோ? ஆகவே, ஒரு மொழியே பெய்யும் பெருமையுடையீர்! தாங்கள் கொள்ளும் உள்ளுறை என்னை?

நிறையுணர்வன்:—இமிழ்திரைக் கடல்சூழ் தமிழக முழுமையும் தன்கீழ் வைத்தாண்ட புகழுடையோய்! நும் நினைவேயன்றி எங்கள் நெஞ்சிலும் நினைவுண்டாம். இம்மண்ணரசைச் செங்குட்டுவனுக்கு நல்குதல் தக்கதே. இவ்வுலகுக் கெல்லாம் அவன் உயிர் போன்றவன். கற்றவரும் மற்றவரும் தாமுண்ணு நீரினும், ஓம்புமுயிரினும் அவனையே பெரிதாக உவக்கின்றனர். இம் மாநிலப் புரக்க அவனிற் சிறந்தார் பிறிதொருவரு மில்லை. அவனரசாட்சியை மக்கள் நல்வரவேற்கின்றனர். ஆகலான் எழுமுடியாரந் தாங்கிய மார்ப! இம்மண்ணவரும், உரைசெய் மந்திரக் கிழவோரும் இருந்தவ மியற்றும் முனிவோரும் பெருமகிழ் வெய்த நீவிர் இம்முடியை அவனுக்குச் சூட்டுவீர். அதன்பின் முறையே நற்றவங்க ளியற்றி மண்ணவரும் விண்ணவரும் போற்ற வீடெய்துவீர். இதுவே என் விருப்பம்.

இமயவரம்பன்:—உற்றுழி யுதவும் பெற்றி யுடையீர்! நம் நிறையுணர்வர் சொற்ற நல்லுரை முற்றவும் ஏற்புடையதே. தாங்க ளெல்லீரும் இதற்குடன் படுதிரென எண்ணுகிறேன். ஆகவே நாம் கொண்ட எண்ணத்தைச் செங்குட்டுவனுக்குத் தெரியப்படுத்துதும். (பெருந்தகைவனெனுமமைச் சனைநோக்கி) பெருந்தகைவ! விரைவினிற் சென்று குட்டுவனை யிவ ணிட்டு வா?

(குட்டுவனும் இளங்கோவும் உள் நுழைகின்றனர். தன் தாதையின் இருமருங்கிலு மமர்கின்றனர்.)

இமயவரம்பன் :—(குட்டுவனைத் தழீஇ) மல்லிவர் தோளினாய்! நின்னைப் பயந்த யான் நின்னிடம் வேண்டிக் கொள்ளும் முறைமை யொன்றுண்டு. அதை ஈண்டு விளம்புவல். கேட்பாயாக. யானோ யாண்டு முதிரப் பெற்றேன். முடியாவும் நரைத்து விட்டது. இனி யான் இச்செங்கோலைத் தாங்கி நடாத்து மாற்றலுடையே னல்லேன். இவ்வரசை நின்னிடம் ஒப்புவித்துவிட்டு யான் தவமியற்றச் செல்கின்றேன். ஆகையால் இப்பொன் முடியைத் தரித்தற்கு நீயே தக்கவனென்று இம்மந்திரக் கிழவோர் விழைவதால் அவ்விருப்பத்திற்கு நீ உடன்படுதல் வேண்டும். சிறந்த மக்களைப் பெறுவது, பெற்றோர் இம்மை மறுமை யாகிய யிருவின்பங்களையு முறுதற்கெனப் பெரியோர் அறைகுவர். யான் இன்னும் இம்மானிலத்தைப் புரக்கும் இடும்பையி லுழலுவேனாகில் நின்னைப் பெற்றதாலுண்டாய பயன் யாது? ஆகவே இவ்வரசியற் சுமையை யேற்று நடத்த வேண்டுமென்று கூறுவதற்கே நின்னை ஈங்ஙன் ஈண்டச் சொன்னேன். அதை நீ நிறைவேற்றுவாயாக!

(நிகழ்வது கூறவல்ல கணிவகன் அரசன் மக்களைக்கூர்ந்து கவனிக்கிறான்)

கணிவன் :—புறங்கொடை யறியா மறந்திகழ் வேலோய்! நின் அறம் வாழ்க. அடியேன் இவ்விடத்தில் கூறவேண்டுவ தொன்றுண்டு. அதற்குத் தங்கள் திருவுளமிசைந்திடின் யான் எனது எண்ணத்தை வெளியிடலா மெனக் கருதுகின்றேன்.

இமயவரம்பன் :—நிகழ்வ துரைக்கவல்ல கணிவ! நினதெண்ணத்தை யிவண் தாழாது வெளியிடுக. தக்கதெனின் யாம் நன்றெனக் கொள்வோம் அல்லதெனின் அதைப்பற்றியும் வெகுள்வோ மல்லேம். தடையில்லாது செப்புவாய்.

கணிவன் :—வீரியர் வீரம் விழுங்கி நின்ற வீர! நும்புதல்வரிருவருள் இளையோனே இச்செங்கோலைத் தாங்குதற் குரியன். சகல இலக்கண வரம்புகளும் அவனிடமே தென்படுகின்றன. ஆகையால் அரசுச்சுமையைத் தாங்கவல்லவன் தம்பியேயாகும். இக்காட்சி தங்கள் கூற்றுக்கு முற்றும்முரணாகத் தெரிவதை நினைத்து யான் அஞ்சுகிறேன்.

(செங்குட்டுவன் கணிவனை வெகுண்டு நோக்குகிறான். தம்பியாகிய இளங்கோ குட்டுவனின் முகம் மாறுபாடடைவதைப் பார்க்கிறார். இருக்கைவிட்டெழுகிறார்.)

இளங்கோ :—அறிவுடையோர்களே! பெரியோர்களே! இப் பேரவையில் இக்கணிவன் துணிவுடன் கூறியதை நீங்கள் கேட்டீர்கள். அதற்காக வருந்தல் வேண்டா. முறைமை கெடச் செப்பிய கணிவன் கூற்றுக்காகவா மனமுளைந்து நிற்பது? அதுவும் நுங்கள் போன்றார்க்கு இஃது நேரி தாமோ? வாயில்வந்தவாறு பொய்யை மெய்யாக வுரை செயும் புல்லறிவினர் சொல்லுக்காகவா நாம் அல்லற் பட்டு நிற்பது? குலத்துக்கு மூத்தோனிருக்கையில் தம்பி பட்டங்கட்டியாண்டால் உலகு ஏற்குமோ? அன்றி நம் மரபிற்குத்தான் பெருமையுண்டாமோ? ஆகவே முறை தவறிச் சொன்ன கணிவன் செயலைக் கண்டு நகைப்பதா, அன்றி நாணுவதா!

ஆதலால் அறிவுடையீர்! எனக்கு இவ்வுலகப்பற்று வெறுப்பைத் தருகிறது. இவ்வாழ்க்கை எனக்கின்பம் பயக்குமென்று கனவிலும் கருதவில்லை. ஏனெனில் இவ் வுலகம் பலவிதத் தீச்செயல்கட் குறைவிடமாகக் காணப் படுகிறது. பொய்யுரையும் புறஞ் சொல்லும் மக்களிடைப் பரவி வருகின்றன. தெய்வத்தைத் தெளிந்து வழிபடாது மக்கள் அடாதசெயல் பல புரிகின்றனர். தானமும் தவ மும் தழைத் தோங்கிற்றிலது. உயிர்க்கொலை புரிவதும் செய்நன்றி மறப்பதும் மக்களியல்பாய்த் தோற்றுகின் றன. பிறன்மனை விழைதலும் பொய்க்கரி கூறுதலும் மாந்தரிடை மிகுந்து விட்டன. அம்மம்ம! கொடிது! கொடிது!! இவ்வுலக நாடக அரங்கிற் றோன்றும் கொடுந் தொழிற் காட்சிகள் என்று மறையுமோ அன்றே உலகம் உயர்வுறும். தூய்மை பெறுவர் மக்கள். நேர்மை தரும் அவர்தம் வாழ்க்கை. மேலும் இளமையும் செல்வமும் இப்புன்புலால் யாக்கையும் நிலைபெறுதென்று யாண்டு மனிதனுணர் கின்றானோ ஆண்டே அவனது வாழ்க்கை விழுமியதாகும். ஆகவே என் மனம் நிலையற்ற இவ்வுலக இன்பத்தைத் துறந்து அந்த மிலின்பத்தை நாடிச் செல் கிறது. ஆதலால் யான் எனதுயிர்க் குறுதிதரும் தவத்தை மேற்கொளச் செல்கின்றேன். என் தமை யனே இந்நாட்டை யாளட்டும். ஆனால் நானும் அவனுட னிருப்பே னென்பதை நீங்களும் அறிந்து கொள்ளவேண் டும். எனவே என் பொருட்டுக் கணிவன்பாற்கொண்ட முனிவைப் போக்குவீராக.

(என்றுகூறி இளங்கோ அமர்கின்ற னர். யாவரும் செல்கின்றனர்.)

(தொடரும்)

தலைச் சோறு

[வித்வான், மு. வரதராஜன், பி. ஓ. எல்.,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.]

திராவிட மொழிகளுள் உயர்தனிச் செம்மொழியாகிய தமிழ்மொழியுடன் நெருங்கிய தொடர்புடையது மலையாளமே; அம் மொழியைத் தமிழினின்று கிளைத்த மொழியாகக் கூறுதலும் பொருந்தும் என்று அறிஞர் **கால்டுவேல்** தமது அரிய ஆராய்ச்சியின் கண்ணே விளக்கியுள்ளார். தமிழன்னையின் மணி வயிற்றில் உதித்தெழுந்த மொழிகளுள் மலையாளமும் ஒன்று என்பது மனோன்மணீய நூலாசிரியர் கருத்தாகும். நடுநிலை வாய்ந்த ஆராய்ச்சியாளர் அனைவரும் தமிழின் தொன்மையையும் மலையாளத்தின் தோற்றத்தையும் நன்கு அறிவர்.

மலையாளம் என்னும் பெயர் **மலை** என்னும் சொல்லினடியாகப் பிறந்தது; மலை + ஆள் + அம் எனப் பிரிக்கப்படும். வேளாளன், வில்லாளன் முதலியவற்றிற்போல, ஆள் என்னும் உறுப்பு ஈண்டும் உரிமைப் பொருளை உணர்த்துகின்றது. ஆதலின், அச்சொல் மலையுடைய நாடு என்னும் பொருள்படும். வட ஆர்க்காடு ஜில்லாவில் ஏலகிரி, சவ்வாது மலைகளின்மேல் உள்ள சிற்றூர்களைப் பொதுவாக மலையாளம் என்றும் அங்கு வாழ்வோரை மலையாளிகள் என்றும் மக்கள் வழங்குதலினும் இப்பொருள் உண்மை தெளியப்படும்.

கேரம், கேரளம் என்பன மலையாள நாட்டிற்குப் பெயராகப் பிறமொழிகளிலும் மலையாளத்திலும் காணப்படுகின்றன. அவை திரிந்த பெயர்களே ஆகும். மலையாளத்தில் **சேரலம், சேரம்** என்னும் பெயர்களும் பழைய நூல்களில் வழங்குகின்றனவாம். எனவே, '**சே**' என்னும் எழுத்தே '**கே**' என வரிவடிவில் திரிந்து மாறி **கேரம், கேரளம்** என்னும் பெயர்களுக்கு இடந்தந்ததெனக் கொள்ளலாம். **சேரநாடு, சேரன், சேரல், சேரலன்** என்னும் சொற்கள் தமிழ்நூல்களில் வழங்குதலும் காண்க.

மொழியின் பெயரும் நாட்டின் பெயரும் ஆகிய இச்சொற்கள் தமிழ்ச் சொற்களாயிருத்தல் இங்ஙனம் விளங்குகின்றது. அன்றியும், கிழக்கு என்றும் மேற்கு என்றும் தமிழில் திசைகளைக் குறிக்க வழங்குஞ் சொற்கள் மலையாளத்திலும் அவ்வாறே உள்ளன. தமிழ் நாட்டில் வாழ்ந்த மக்கள் அப்பெயர்களை வழங்கினமை பொருத்தமேயாம். செல்லச்செல்

லத் தாழ்ந்து விளங்கும் நிலப்பகுதியைக் கீழ்—கிழக்கு என்றும், உயர்ந்து உயர்ந்து குன்றுகளாகவும் மலைகளாகவும் விளங்கும் நிலப்பகுதியை மேல்—மேற்கு என்றும் அத்தமிழர் முதலில் குறித்திருப்பர்.

பின்னர், அச்சொற்களால் அவ்வத் திசைகளையும் வழங்கத் தொடங்கியிருப்பர். ஆனால், இச்சொற்களை மலையாள நாட்டு மக்கள் வழங்குவதில் பொருந்திய பொருள் காணோம். அவர்கள் கிழக்கு என்று வழங்கும் திசையில் குன்றும் மலையுஞ் செறிந்து நிலப்பகுதி மேலுயர்ந்து நிற்கின்றது. மேற்கு என்று வழங்கும் திசையில் நிலப்பகுதி மேற்பட்டு உயராமல் தாழ்ந்து செல்கிறது. ஆதலின், தமிழ்நாட்டிலிருந்து மக்கள் அங்குக் குடியேறினார்கள் என்பதும் அம்மக்கள் கிழக்கு மேற்கு என்னும் சொற்களை அவ்வாறே அங்கும் வழங்கினர் என்பதும் விளங்குகின்றன. அன்றியும் படிஞாறு, படிஞாயிறு என்று மலையாள மொழியில் மேற்குத் திசையைக் குறிக்கப் பெரிதும் வழங்குகின்றனர். அவ்வழக்கும் ஆராயற்பாலதே. படுஞாயிறு என்னும் சொற்றொடர் தமிழில் கதிரவன் மறைவைக் குறிக்கும். பகலவன் மறைவுக்குரிய அத்திசையை அப்பெயரால் வழங்குதல் பொருந்துமன்றோ? ஆதலின், படுஞாயிறு என்னும் தொடர் படுநாயிறு, படிஞாயிறு, படிஞாறு எனப் பலவாறு திரிபுற்றிருத்தல் வேண்டும்.

இவற்றை மலையாள மொழிப்பற்றுடையோரிடம் கூறின், அவர் உடன்படுதல் இல்லை. அன்னாரிடம் மொழிப்பற்று மிகுந்துள்ளவாறே ஆராய்ச்சியும் மிகுமாயின், உண்மை விளக்கம் ஏற்படும். இவ்வுண்மையை விளக்கும் நோக்கத்துடன் மலையாள நண்பர் ஒருவருடன் யான் உரையாடிக்கொண்டிருந்தேன். அவர் ஒருவாறு இசைந்தும் ஒருவாறு உடன்படமறுத்தும் மறுமொழி கூறிக்கொண்டு வந்து இறுதியில் வாளா இருந்தார். அந்நிலையில் என்னுடைய நண்பராகிய மருத்துவர்—டாக்டர்—ஒருவர் இடையே புகுந்தார்; எங்கள் பேச்சிலும் கலந்தார். வாளா இருந்த நண்பரை நோக்கி, "ஐய! மலையாள மொழி தமிழுக்கு நிரம்பக் கடன்பட்டது. மலையாளத்தில் மூளையைக் குறிக்கும் சொல் கூறும்" என்றார். அவர் "உமக்குத் தெரியும்போல் இருக்கிறதே! தலைச்சோறுதானே? அதுவும் தமிழ் என்றா சொல்லுகிறீர்?" என்றார்.

யான் வியந்தேன். என்ன அழகிய சொல்! சோறு என்னும் இனிய செந்தமிழ்ச் சொல்லை இக்காலத்தே நாகரிகம் (போலி....!) உடையோர் தம் நாவால் கூறவும் கூசுகின்றனர்;

பிறர் அச்சொல்லை வழங்கின், அவரைப் பட்டிக்காட்டார் என இகழும் குறிப்புடன் நோக்குகின்றனர். சிற்சில வேளைகளில் 'சாதம்' எனக் கூறித் திருத்தவும் முற்படுகின்றனர். ஆனால், அது தமிழொலி சான்ற இனிய சொல் அன்றோ? "உண்ணும் சோறு, பருகு நீர், தின்னும் வெற்றிலை" என்ற மொழியும் திருவாய்மொழி அன்றோ? நாட்டுப்புறங்களில் சொல் என்னும் நெல்லரிசியால் சமைத்த உணவுக்கே **சோறு** (சொல் + து) என வழங்குதலே அன்றி, வேறு சில சத்துப் பொருள்கட்கும் அச்சொல் வழங்குதல் உண்டு. பனஞ்சோறு, தென்னஞ்சோறு, ஈச்சஞ்சோறு என்பன், பனை, தென்னை, ஈந்து இவற்றின் தலையில் உள்ள செழும்பொருள் ஆகும். இவற்றின் குருத்தை அறுத்துக் குருத்தின்கீழ் உள்ள அச்செழும் பொருளை மக்கள் விரும்பி உண்டு மகிழ்தல் வழக்கம். மக்கள் தலையில் உள்ள **செழும் பொருளுக்கு—மூளைக்குத்—தலைச்சோறு** என்னும் அப்பெயர் எத்துணைப் பொருளமைதியுடன் முன்னோர்களால் வழங்கப்பட்டது!

இவ்வாறெல்லாம் எண்ணி மகிழ்ந்த நான் டாக்டர் நண்பரை நோக்கினேன். "ஐய! நன்று, நன்று. வடமொழிக்கு வாயில்லை என்றார் தமிழ்ப் புலமைசான்ற **சூரியநாராயண சாஸ்திரியார்.** அஃதேபோன்று, மலையாளத்திற்கு மூளையில்லை என்று கூறுதல் வேண்டா. அங்ஙனம் கூறின், நம்முடைய நண்பர் வருந்துவார். மலையாளத்திற்குத் தமிழ்மொழியே மூளை என்று கூறும்; அஃது அவர்க்கு வருத்தம் விளைக்காது" என்றேன்.

செந்தமிழ்ச் செல்விக்கு அன்பளிப்பு

திருத்தொண்டர் விரதம்

எல்லையிலா வுலகையருட் கோயி லென்போம்
  எவ்வுயிரு மெம்முயிரென் றினிதே செய்வோம்
தொல்லைசெயுஞ் சாதிமதச் சார்பை நீப்போம்
  சுத்தான்மப் பொதுவினிலே யொத்து வாழ்வோம்
அல்லலிலை, அச்சமிலை, அடிமை யில்லை.
  'யாமார்க்குங் குடியல்லோம்' என்று ரைப்போம்
நல்லதிருத் தொண்டரெலாம் ஒன்றுபட்டு.
  நாடய்ய நாடோறும் பணிசெய் வோமே.

2

உடலிளமை பெற நாளும் உறுதி செய்வோம்
ஊணுறக்க முறைகாப்போம். உண்மைகாப்போம்
அடலரிய புலன்களை நாம் அடக்கி வெல்வோம்
அறவழியைப் போற்றிடுவோம் ஆவிபோலே
திடவுறுதி கொண்டுலகம் சேர்ந்து வாழத்
தெள்ளியசன் மார்க்கநிலை செழிக்கச் செய்வோம்
கடலருந்தி வான்பொழியுங் கருணைபோலக்
காசினியி லுண்டுதிருத் தொண்டுசெய்வோம்.

3

கரவின்றி இரவின்றிக் கடமை காப்போம்.
கண்போலக் காத்திடுவோம் கருணை யன்னை.
பரிவுடனே எளியவர்க்குப் பகுத்தூ ணீவோம்.
பஞ்சமறத் தொழில் வளர்ப்போம் பாரிலெங்கும்.
அரசனிலை, ஆண்டியிலை, நிகரெல்லோரும் ;
அருளான்ம நேயர்களாய் வாழ்வோ மென்போம்.
பரமனடி மலரல்லாற் பற்றொன் றில்லோம்.
பணியெல்லாம் பூசனையாய்ப் பரவுவோமால்.

4

பிழைப்பிற்குப் பஞ்சமிலை பெரிய வானம்
பெய்யுமட்டும் வளனுண்டு நிலனு முண்டு
உழைப்புதவும் பயன்களையாம் ஒருமித் துண்போம்
உழைக்காமல் யாருக்கும் உணவிங் கில்லை.
செழிப்புறவே நங்கலையுந் தொழிலுஞ் சீரும்
செவ்வியசன் மார்க்கவெளி சேர்ந்தெல்லோரும்
தழைப்பதற்கே தாளாண்மை செய்வோ மென்றும்
தளராது வேளாண்மை செய்வோம் நாமே!

5

தெளிவுடையார் சித்தத்திற் சிவம் விளங்கும்
திருத்தொண்டர் கூட்டத்திற் சிவம் விளங்கும்
அளியுடையார் அன்பினிலே சிவம் விளங்கும்
ஆன்மநே யர்களிடைச் சிவம் விளங்கும்.
ஒளியுடையார் நெஞ்சினிலே சிவம் விளங்கும்.
உயிர்க் கருணை யுடையார்பாற் சிவம் விளங்கும்
கனிவளருங் கனகசபை யுலகிற் காணும்
கருத்தினிலே சிவங்கண்ட கண்ண னார்க்கே !

—சுத்தானந்த பாரதி

மான்

புன்றலை மானே! புன்றலை மானே!
மென்றலை புரையும் மேனி மடந்தையர்
கண்போல் மருளும் கண்பெறு மானே!
வானம் பொய்த்துக் கானம் தீயினும்
ஏனலும் புல்லும் இளமென் றளிரும்
தேனுறு பூவும் தின்னுவ தல்லது
மீனும் விலங்கின் ஊனும் உண்ணாய்
வாழ்க நின்னாள்—மடநன் மானே;
மெய்ந்நா வலர்புகழ் பொய்யா மொழிதன்
தெய்வத் தமிழ்மறை செவியுறுத் தினனோ?
தூய நீயும் பகையால் துயருற,
நாயும் வாழும்; பேயும் வாழும்;
தீயரும் வாழ்வர்; சிறப்பில்
மாயிரு ஞாலம் மாய்க விரைந்தே.

சிலந்தி

எண்காற் சிலந்தி எண்காற் சிலந்தி!
நுண்நூல் நூற்கும் எண்காற் சிலந்தி!
நுண்நூல் நூற்று, மென்வலை யாத்து,
நின்னுரு மறைத்து, மன்னுயி ரலைத்துப்
புன்புலா லுண்டல் புகழ்க்கிட மாமோ?
கண்கவர் வனப்பிற் களிமயி லனையார்
பண்ணமர் செந்தமிழ் ஒண்ணூல் போலும்
நுண்ணூல் நூற்கப், பண்ணா டமைத்துக்
கரவும் கொலையும் கருத லின்றி,
அரவுரி யன்ன அறுவை நெய்தியாம்
இடமும் பொருளும் ஏவலு மில்லா
மடியர் முதலா மன்னர் ஈறாப்
படிவாழ் மக்கள் பலரும் மேம்பட
வேண்டுவ வேண்டுவ வேண்டுவார்க் கீந்து,
மாண்டகு சிறப்பில் வருவிலை வாங்கி,
உண்டும் உடுத்தும் கொண்டும் கொடுத்தும்
கண்டும் நெஞ்சம் களித்து வாழ்தும்
அறம்புகழ் தருவ தல்லது
மறம்புகழ் தருமோ மடமிக் கோயே.

—வித்துவான் பெ. கோவிந்தன்.

இந்தியாவின் பண்டைக் கலை

[வித்வான் மா. இராசமாணிக்கம் B.O.L.]

III

ஆரியர் இந்தியாவில் தங்கியதால் ஆரியமதம் பழைய இந்தியர் மதத்துடன் கலந்து இன்றைய 'இந்துமதம்' ஆக மாறிவிட்டது; இந்தியாவின் மூன்றில் இரண்டு பாகம் ஆரிய மொழிகள் பேசப்படும் நாடாக மாறிவிட்டது. தென் இந்தியாவில்தான் ஆரியர்க்கு முற்பட்ட திராவிடம் செல்வாக்குப் பெற்று உயிருடன் இருக்கின்றது. தென் இந்தியாவையும் தன் அடிப்படுத்த ஆரியக்கலை முயன்றதுண்டு. அசோகன் திராவிடம் அல்லாத பாலி பாஷையில் பௌத்த தருமத்தைச் சித்தல் துர்க்கம் (மைசூர்), கர்நூல் என்னும் இடங்களில் பொறித்தனன் என்பது ஆரிய பாஷை அந்த இரண்டிடங்களின் அளவு தெற்கே பரவி இருந்ததை உணர்த்துகிறதன்றோ? அசோகனுக்குப் பின் கி. மு. 200 முதல் கி. பி. 450 வரை ஒருவகைப் பிராக்ருத மொழி இந்தியாவின் பெரும்பகுதியில் அரசியல் அல்லது உத்யோக மொழியாக இருந்ததென்பது தெரிகிறது. அது மதசம்பந்தத்துக்கும் மதநூல்கட்கும் பயன்பட்டது. இம்மொழியில் பொறிக்கப்பட்ட சாஸனங்கள் கன்னடநாட்டில்மட்டுமன்றித் தமிழகத்தின் நடுவிடத்திலும் காணப்படுகின்றன. அவை எல்லாச் சாதித் தமிழ்மக்களாலும் படிக்கப்பட்டிராவிடின், அவ்வந்நிய மொழியில் செதுக்கப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டிராது. *

பிரிட்டிஷ் இராச்சியம் பரவத்தொடங்கியதும் இந்தியாவில் ஆங்கிலக் கலையுணர்வு உயர்வுபெறலாயிற்று என்பதை

* இது தவறான கூற்று. மதுரை ஜில்லாவில் இரண்டோரிடங்களில் மலைக்குகைகளில் ஜைனர் அல்லது புத்தர்கள் வாழ்ந்தனர். அவர்கள் தம் வடநாட்டு மொழியில் செதுக்கிய சாஸனங்களைக் கொண்டு, அம்மொழி எல்லாத் தமிழ் மக்கட்கும் தெரிந்த மொழியாதல் வேண்டும் என்று முடிவுகட்டுதல் அடாது. தமிழகத்து அரசர் தந்த சாஸனமாயின், அப்பழைய காலத்தில் (கி. மு. 200-கி. பி. 450) தமிழிலேயே எழுதப்பட்டிருக்கும். அவை வேற்று மொழியில் இருத்தல் ஒன்றே தமிழரசர்க்கும் தமிழ்மக்கட்கும் அவற்றுக்கும் கடுகளவும் தொடர்பில்லை என்பதைக் காட்டுகிறது. தமிழ்நாட்டில் உள்ள முஹம்மதியர் உருதுவில் அல்லது அரபியில் கணக்கு எழுதி வைத்துள்ளமையால், தமிழர் அனைவரும் உருது அல்லது அரபி அறிந்தவர் என்று முடிபுகட்டுதல் எத்துணை மூடத்தனமோ அத்துணை மூடத்தனமாகும் இவ்வாபத்தான ஆதாரமற்ற முடிபுக்கு வருதல்.

—மா. இரா,

எவரே அறியாதவர்? மதுசூதன டட், டோரு டட், சரோஜனி அம்மை போன்ற இந்தியர், தம் தாய் மொழியில் பாக்களைப் பாடாது ஆங்கிலமொழியில் யாத்தலே பெருமை என்று கருதி யாத்தனர் அல்லரோ? அதனால் அவர், நிலைத்த புகழை அடைந்தனர் அல்லரோ? இந்நிலையில், அப்பழைய காலத்தே ஆரியர் அல்லாத மக்கள் ஆரிய மொழியாகிய சம்ஸ்கிருதத்திலேயே தங்கள் கருத்தை வெளியிடத்தக்க மொழியாகப் பயன்படுத்தினர் என்பதில் வியப்பென்னை?*

ஆரியர் நன்மையைத் தரும் உயர்ந்த கடவுளரை வணங்கியபொழுது மங்கோலியரைச் சேர்ந்த 'சால்டியர்' தேவதைகளை வழிபட்டு வந்தனர்; மாந்த்ரீகம், வசியம் இவற்றில் நம்பிக்கை கொண்டிருந்தனர். இவைபற்றிய சுலோகம் ஒன்று அதர்வ வேதத்தில் உள்ளது. இது பால கங்காதர திலகரால் சுட்டப்பட்டது. 'தைமதா,' அலிகி, விலிகி, உருகுலா' என்னும் நான்கு தெய்வங்களின் பெயர்கள் அச்சுலோகத்தில் காணப்படுகின்றன. 'தைமதா—இது சால்டியரது 'தைமத்' என்னும் கடவுளாகும். 'உருகுலா'—இது அக்கேடிய மொழியில் காணப்படும் சொல்' விலிகி—இஃது அசிரியரது கடவுளான 'பிலிஜி' என்பதாகலாம் என்பர் திலகர். அநாரிய மூலத்தையுடைய சுலோகங்கள் பல ரிக்வேதத்திலும் உள்ளன. அவற்றுள் காணப்படும் சொற்களுள் ஒன்று 'அப்ஸு' (Apsu) என்பது. அது சால்டியச் சொல்லான 'அப்சு' (Apzu) என்பது என்பர் திலகர். மற்றொரு சொல் 'யஹ்வ' என்பது. இதுவும சால்டியச் சொல்லான 'யஹ்வே' என்னலாம். இவை அனைத்தினும் சிறந்த அநாரியச் சொல் 'அசுர' என்பது. ரிக்வேதத்தில் ஆரியர் கடவுளரான இந்திரன் 'அசுரன்' எனவும், மித்ரவருணன் 'அசுரன்' எனவும் படுகின்றனர்: 'அசுர' என்பது ரிக்வேதத்தில் பரம்பொருளையும், மனிதருள் ஒரு பிரிவினரையும் குறித்ததெனல் உண்மை. 'விரிகத்வராஸ் பிப்ரு' என்னும் அசுர அரசரும் குறிப்பிடப்பட்டு உள்ளனர். அசுரர், ஒரு காலத்தில் அசிரியராக இருந்திருக்கலாம். ரிக்வேதக் கடவுளர் அசுர-ஹன் (அசுரரைக் கொன்றவர்) எனப்படுகின்றனர். 'அசுரரைக் கொன்றவன்' என்னும் பொருளில் வரும் சுலோகங்கள் ஆரியராலும், உயர்பொருளில் வரும் சுலோகங்

* இந்நிலைமை, ஆரியரால் வென்று ஆளப்பட்ட இந்திய நிலப் பகுதியில் ஆரியரோடு வாழ்ந்த ஆரியரல்லாரால் கையாளப்பட்டது என்பதை நினைவில் இருத்துதல் வேண்டும்.

—மா. இரா.

கள் ஆரியமதத்தைத் தழுவிய அசிரியராலும் செய்யப்பெற்றன வாதல் வேண்டும். ஆரியமதம் தழுவிய அசுரர் இன்றுள்ள இந்துமக்கட் டொகுதியுள் கலந்து கரைந்துவிட்டனர். தென் பிஹாரில் இன்றும் தம்மை 'அசுரர்' என்று கூறும் ஒரு வகுப் பார் இருந்து வருகின்றனர் என்பது இங்கு அறியத்தக்கது. **அசுரர் இந்தியக் கலையறிவில் பங்கு கொண்டவர்—கலையை வளர்த்தவர்** என்பதில் ஐயமில்லை இதனை விளக்க 'அசுர மணம்' ஆரிய மணத்துள் இடம்பெற்றுள்ளது ஒன்றே போது மன்றோ? ஆபஸ்தம்பர் தமது தர்மசாஸ்திரத்துள் இம்மணத் தை விளக்கியுள்ளார். பெண்ணுக்கு விலைதந்து அவளைப் பெறுதலே இம்மணத்தின் சிறப்பு. இம்முறை அசிரியரிடமும் பாபிலோனியரிடமும் இருந்தமை அறியத்தக்கது. அசிரியர் பெண்ணிடம் விலை தருவர்; பாபிலோனியர் பெண்ணின் தந்தையிடம விலைதருவர்.

அதர்வ வேதம் மாந்திரீகம், வசியம் பற்றிய—ஆரியர் மனத்துக்கு மாறான—சுலோகங்களைக் கொண்டது. இதனாற் றான் இது, ஏனைய மூன்று வேதங்களின் சிறப்பைப் பெற வில்லை. இந்நூலுள் உள்ளவை அநாரியர் கலையறிவை உணர்த்துவன. எனினும், இதனால், இக்கலையாளர், வட மொழியையே தங்கட்கு உகந்த மொழியாகக் கொண்டிருந்த னர் என்பது நன்கு தெரிகிறது. 'அதர்வ வேதம்' என்னும் சொல்லே சூத்திரங்கள் காலத்துக்கு (கி மு. 300-க்கு) முன் கேட்கப்படவில்லை. ரிக்வேதக் கடவுளராய இந்திரன், வருணன் முதலியோர் அதர்வ வேதத்தில், தெய்வத்தன்மையற்றவராய் —பேய், பிசாசுகளைக் கொல்பவராகவே—கூறப்பட்டுள்ளனர் என்பது கவனித்தற்கு உரியது. **ஆரியர் கலை, சால்டியர் கலை ஆகிய இரண்டும் ஒன்றுபட்டதன் பயன் இதுவாகும்.** பல சுலோகங்கள் உயர்ந்த கருத்துக்களை உடையன; ஆயின், தம்முள் மாந்திரீகம் முதலியவற்றையும் கொண்டுள்ளன.

(ஹிந்து, 24—2—1939)



[காழிக்கண்ணன்]

௪. உடைந்த பாலம்

கிழவி பொருள் சிறிது பெற்றுக்கொண்டு என்னைச் சிற்றாரிலிருந்த வளவு ஒன்றில் அவ்வப்பொழுது இரண்டொரு நாள் விட்டு வைப்பாள் என்றும், அங்கே என்னை உழவிலும், "ரேக்ளா" விலும் கட்டி அடிப்பது எனக்குப் பிடிப்பதில்லை என்றும் கூறினேனன்றோ!

ஒரு முறை நான் வளவில் இருந்தபோது நடந்த சிறு செய்தியொன்றைக் கூறுகிறேன், கேளுங்கள். என்னை வளவிலுள்ளவர்கள் தங்கள் மாட்டுத் தொழுவத்தில் கட்டிவைப்பது வழக்கம். அத்தொழுவத்தில் என்னைப் போன்ற சிறு வயதுடைய நாலைந்து இளங்காளைகளும் இருந்தன. நான் அவற்றோடு நெருங்கிய நட்புப் பாராட்டி வந்தமையால் அவை என்னிடம் மிகுந்த மதிப்பு வைத்திருந்தன.

ஒருநாள் வளவிலிருந்த நான்கு சிறுவர்கள் "ரேக்ளா"ப் பந்தயம் விடலாம் என்று பேசி முடிவு கட்டிக்கொண்டார்கள்.

"இந்தக் காளையை நான் பூட்டிக்கொள்ளுகிறேன்" என்று என்னைக் காட்டினன் குமரன். "எப்பொழுதும் இவன் இப்படித் தானடா. நல்லதாயிருப்பதெல்லாம் தனக்குத் தனக்கு என்பான்" என்று மற்ற மூவரும் ஒரே மூச்சில் எதிர்த்தார்கள்.

"சரி, அப்படியானால் சீட்டுக் குலுக்கிப் போடலாம், வாருங்கள்" என்றான் குமரன்.

"எப்படியடா காளைகளைப் போட்டுக் குலுக்கி யெடுக்கிறது! அவற்றைப் போடப் பை அகப்படுவதாக வைத்துக் கொண்டாலும் தூக்கிக் குலுக்க யாராலேடா முடியும்?" என்று கூறினான் சுப்பையன்.

"பலே புத்திசாலியடா இவன். காளைகளைப் பையிலே போட்டுக் குலுக்குகிறதாம்! ஏனடா, காளைமாடுகள் எல்லாம் பம்பரம் என்று நினைத்துக்கொண்டாயோ?" என்று இகழ்ந்தான் அழகப்பன்.

"பின்னை சீட்டுக் குலுக்கிப் போடுகிறது எப்படியடா, சொல் பார்க்கலாம்" என்றான் சுப்பையன்.

"ஒன்று, இரண்டு, மூன்று என்று காளைகளுக்கு எண் கொடுத்து அந்த எண்களைச் சீட்டில் எழுதிக் குலுக்கிப் போட்டு எடுத்தால் சரியாகப் போகிறது. இதை விட்டு விட்டுக் காளைகளைப் பையிற் போட்டுக் குலுக்கச் சொல்கிறான், பிரகஸ்பதி." என்றான் அழகப்பன்.

"இவன் மிகுந்த புத்திசாலிதான்; எங்கள் முதுகில் ஒன்று இரண்டு என்று எழுதித் தொலைப்பதைவிட எங்களை வரிசையாக நிறுத்திக் காரியத்தை முடித்துக்கொள்ளத் தெரியாத இந்த முட்டாள் பெரு முட்டாளல்லனோ?" என்று நான் என் மனதிற்குள் நினைத்துக்கொண்டேன்.

அழகப்பன் பெரிய சீமைச் சுண்ணாம்புக் கட்டியொன்றை எடுத்துவந்தான்; என் முதுகில் "ஒன்று" என்று ஒரு கோடு இழுத்தான்; பின் என் பக்கத்தில் கட்டப்பட்டிருந்த காளையின் முதுகில் "இரண்டு" என்று எழுதிக் கொண்டிருந்தான். அப்பொழுது என் உடம்பை நான் ஒரு குலுக்குக் குலுக்கினேன். சுண்ணாம்பு எல்லாம் உதிர்ந்துவிட்டது.

"சீ, கழுதை" என்று சொல்லிக்கொண்டே அழகப்பன் மற்றொருமுறை ஒரு கோடிழுத்தான். அதற்குள் என் பக்கத்திலிருந்த காளை தானும் தன் உடலைக் குலுக்கிற்று. "இரண்டு" காற்றிற் பறந்துவிட்டது. உடனே நான் அந்தக் காளைக்கும், மற்றக் காளைகளுக்கும் ஒரு குறிப்புக் காட்டினேன். அவையும் அதனை உணர்ந்துகொண்டன. அழகப்பன் 1, 2, 3, 4 என்று எழுதி முடித்தான். குமரன் ஒரு சிறு பையில் நான்கு சீட்டுகளைப் போட்டுக் குலுக்கினான். ஆளுக்கு ஒவ்வொன்றாக நால்வரும் சீட்டை எடுத்துப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அச் சமயத்தில் நான் என் உடலை

வேகமாகக் குலுக்கினேன். மற்றக் காளைகளும் அவ்வாறே குலுக்கின. எண்கள் தரையில் உதிர்ந்துவிட்டன; பையன்கள் ஒருவரை யொருவர் திட்டிக்கொண்டனர். கூச்சல் மிகுதி யாகவே, தொழுவத்துக் காவற்காரன் "என்ன, என்ன?" என்று ஓடிவந்தான். சிறுவர்கள் நடந்ததைக் கூறினர். "அட, இதுக்கா இத்தினி அமுக்களம்! கட்டியிருக்கிற காளைங்களை வரிஞ்சலா ஒண்ணு ரெண்டு மூணு இண்ணு கணக்கு வச்சிக்குங்க; சீட்டைக் குலுக்கிப் போட்டுக் காளைங்களைத் தெரிஞ்சிகிங்களே அதைவிட்டு முதுவுலே எழுதறதாவது, மூஞ்சிலே எழுதறதாவது!" என்று கூறினான் காவற்காரன். அப்படியே எண்ணப்பட்டுச், சீட்டும் குலுக்கப்பட்டது. குமாரனுக்கு "ஒன்று" கிடைக்கவே அவன் என்னைப் பிடித்துத் தன் "ரேக்ளா"விற் பூட்டினான். அழகப்பன் ஒன்றும், சுப்பையன் ஒன்றும், திருவேங்கடம் ஒன்றுமாக மூன்று காளைகளைப் பிடித்துப் பூட்டிக்கொண்டார்கள்.

அழகப்பன் "நான் முதலில் போகிறேன்" என்று சொல் லித் தன் காளைக்கு ஒரு சாட்டையடி கொடுத்தான். "கட கட" வென்று அவன் வண்டி புறப்பட்டது பின்னாலேயே சுப்பையன் "ரேக்ளா"வும், திருவேங்கடத்தின் "ரேக்ளா" வும் புறப்பட்டன. குமரன் தன் சாட்டையையும் எடுத்து என்னை அடிப்பதற்குள் நான் "சிவுக்" என்று புறப்பட்டேன். நாலே பாய்ச்சலில் அழகப்பனைத் தாண்டி எல்லோருக்கும் முன்னால் ஓடத் தொடங்கினேன். "என்ன இருந்தாலும் குமரன் காளை காளைதான்டா! மான் வேகம் மனோ வேகமாக வல் லவோ ஓடுகிறது!" என்று மற்ற சிறுவர்கள் வியந்து கூவினர் கள். "அப்படி, அப்படி!" என்று குமரன் மிகுந்த உவகை யுடன் உரத்துக் கூவிக் கொண்டே வந்தான்.

ஒரு கல் தொலைவிற்குக் கிட்டத்தட்ட இவ்வாறு ஓடிவந்த தும் என் முன் ஒரு மரப்பாலம் தென்பட்டது. அதன்மேல் இரண்டடி எடுத்து வைத்ததும் நான் தட்டென நின்றுகொண் டேன். ஏன்? அப்பாலத்தின் குறுக்குப் பலகைகளில் இரண்டு மூன்று உளுத்துப் போயிருந்தன; அவ்விடத்தைத் தாண்டிச் செல்ல முயன்றால் பலகைகள் மளமள வென்று முறிந்து விழும்; நானும் "ரேக்ளா"வும், குமரனும் எல்லோரும் கீழே யிருந்த ஆற்றில் முழுகிச் சேற்றில் அழுந்தவேண்டியதுதான். இந்த நிலையை உணர்ந்தே நான் மேற் செல்லாமல் நின்று கொண்டேன். "போடா, போ, ஏன் நிற்கிறாய்?" என்று குமரன் முதலில் அன்புடன் கூறினான். "அவர்களெல்லாம்

நெருங்கி விட்டார்கள், விரைந்து செல், அஞ்சாதே" என்று நயமாக இரண்டொரு முறை கூறினான். நான் மேற் செல்லா மல் நிற்கவே, சாட்டையால் இரண்டடி அடித்தான். நான் பின்னே தள்ளிச் செல்லத் தொடங்கினேன்.

"குமரா, ஏன் திரும்புகிறாய்?" என்று அழகப்பன் கேட்டான்.

"இந்தத் தடிக்கழுதை என்னவோ பாலத்தின்மேற் செல்ல மாட்டேன் என்கிறது." என்று கடுகடுத்துக் கூறினான் குமரன்.

"அடே, அது எதையாவது கண்டு பயந்திருக்கும். நான் முன்னே போகிறேன்; என் பின்னால் வா, பார்க்கலாம்." என்று அழகப்பன் தன் வண்டியை முன்னே ஓட்டத் தொடங்கினான்.

எங்கே அந்த முட்டாள் சிறுவன் ஆற்றில் விழுந்து கிடக்கப் போகிறானோ என்று அஞ்சி நான் மீண்டும் விரைந்து பாலத்தை நோக்கி ஓடினேன். குமரனுக்கு ஆனந்தம் பொங்கிற்று.

ஆனால், நானோ பாலத்தை நெருங்கியவுடன் மேற் செல்லாது குறுக்காக வழியை மறைத்து நின்றுகொண்டேன். குமரன் மிகுந்த சினங்கொண்டு அடிக்கலானான். "வாலைப் பிடித்து முறுக்கடா குமரா" என்று கத்தினான் அழகப்பன். "சில சமயங்களிலே இந்த மாடுகள் இப்படித் தானடா. மேற்கே போக வேண்டுமென்று சொன்னால் கிழக்கே மூலை வாரிக்கொண்டு போகும்" என்று அவன் தொடர்ந்து கூறினான்.

குமரன் சாட்டையை வாயிற் கவ்விக் கொண்டு என் வாலைப் பிடிக்கக் குனிந்தான். நான் "விண் விண்" என்று உதைக்கத் தொடங்கினேன். "சரி, நான் என் வண்டியை முன்னே விடுகிறேன். அப்பொழுது இது ஒரு வேளை பின்னே வந்தாலும் வரும்" என்று சொல்லி அழகப்பன் என்னை வழியைவிட்டு இழுத்தான். எனக்கிருக்கும் அறிவுகூட இல்லாத இந்தக் குருட்டுச் சிறுவன் விழுந்தால்தான் அவனுக்கும் மற்றவர்களுக்கும் அறிவு தோன்றும் என்று நினைத்து, நான் வழியை விட்டு விலகிக் கொண்டேன்.

தடதட வென்று அழகப்பன் வண்டி பாலத்தின்மேல் ஓடிற்று. "மளமள" வென்று ஓர் ஓசை கேட்டது. அவ்

வளவுதான். "ஐயோ, ஆ" என்று அலறிக் கொண்டே அழகப்பன் ஒருபுறமும் அவன் வண்டியும் மாடும் ஒருபுறமுமாக ஆற்றினுள் விழுந்தார்கள். நான் நினைத்ததுபோல் வண்டியின் பாரம் தாங்காமல் பலகைகள் முறிந்துவிட்டன. நல்ல வேளையாய் அழகப்பனுக்குக் காயம் ஏதும் படவில்லை. ஆயினும் தலை முதல் கால் வரையில் அரையங்குல கனத்திற்குச் சேற்றைப் பூசிக் கொண்டவனுய்க் களிமண் பொம்மையைப் போன்று தத்திக்குத்தி வெளிவந்தான் அழகப்பன். அதைக் கண்ட மற்ற சிறுவர்கள் "ஹஹ" வென்று சிரித்தார்கள். நானும் தலையைத் தாழ்த்தி ஒரு முக்காரம் போட்டேன்.

"அதனுல்தானடா இந்தக் காளை இவ்வளவு அடியையும் வாங்கிக் கொண்டு ஓர் அடிகூட நகரமாட்டேன் என்றது! அதற்குத் தெரிந்தது கூட நமக்குத் தெரியவில்லை; பாருங்களடா" என்ருன் குமரன்.

அன்று முதல் அச் சிறுவர்கள் என்னை மிகவும் அன்புடன் நடத்திவரலானுர்கள். "ரேக்ளா"த் தொல்லை எனக்கு ஒருவாறு ஒழிந்து விட்டது.

சைவசமயத் தொன்மை

அமெரிக்காவைச் சேர்ந்த மெக்ஸிகோவிற்கு அருகில் கொல்ரேடோ ஆற்றுச் சமவெளியிலுள்ள மலையுச்சியில் உலகில் பழையதாகக் கருதப்படும் சிவன்கோயில் ஒன்று உள்ளது. அஃது குறைந்தது நூருயிரம் ஆண்டிற்கு முற்பட்டதென்று அந்நாட்டினர் கருதுகின்றனர்.

பாபிலோன் முதலிய நாடுகளிற் பண்டைக்காலத்தில் ஆண்டின் மூன்ருவது திங்கட்பெயர் சிவனெனவே வழங்கிற்று. சிவனென்னும் திங்களின் 6-வது நாள் மோசேய்க்குச் சிஞய் மலையில் பத்துக் கற்பனைகளைக் கடவுள் அருளினுர் என்பது வரலாறு.

கிரேக்கர் வணங்கிய ஸியூஸ் என்ற தெய்வம் சிவனே என்று பல அறிஞர் கருதுகின்றனர். கிரீஸ் நாட்டிற் பிறையணிந்த ஒரு தெய்வம் வழிபடப்பட்டதெனவும் அறிஞர் கூறுகின்றனர்.

—ந. சி. கந்தையாப் பிள்ளை

கால்டுவெல் ஒப்பிலக்கணம்

[காழி. சிவ. கண்ணுசாமி, பி.ஏ.]

திராவிட மொழிகள்

"திராவிடம்" என்ற சொல் வராகி* என்ற மொழி நீங்கலாக, கீழ்வரும் பன்னிரண்டு மொழிகளை உட்கொண்டதாகும்.

திருந்திய மொழிகள்

1. தமிழ்
2. மலையாளம்
3. தெலுங்கு
4. கன்னடம்
5. துளு
6. குடகு அல்லது கூர்க்கு

திருந்தா மொழிகள்

1. துடா
2. கோட்டா
3. கோண்டு
4. காண்டு அல்லது கூ
5. ஓராவோன்
6. இராஜ்மஹால்

தமிழ்

திராவிட மொழியினங்களுள் மிகவும் தொன்மைவாய்ந்த திருந்திய மொழி தமிழேயாம். அது சொல்வள மிகுந்தது;

பேசப்படு மிடம்

பண்டைச் சொல்லிலக்கணத் தொல்வடிவங்களிற் பெரும்பாலனவற்றை இகவாதுகொண்டு மிளிர்வது. இதனாலேயே மேற்கண்ட பட்டியில் தமிழுக்குத் தலைமையிடம் அளிக்கப்பட்டது. தமிழ் மொழி செந்தமிழ், கொடுந்தமிழ் என இருவகைத்து. செந்தமிழ் என்பதைப் பண்டைத் தமிழ் என்றும், இலக்கிய வழக்குத் தமிழ் என்றும் கூறலாம்; கொடுந்தமிழ் என்பதை இன்றைத் தமிழ் என்றும், பேச்சு வழக்குத் தமிழ் என்றுங் கூறலாம் இவ்விரண்டிற்குமுள்ள வேறுபாடுகள் மிகப் பல. அவ் வேறுபாடுகளை நோக்க இவ்விரண்டும் இருவேறு தனி மொழிகள் என்றுகூடக் கூறிவிடலாம். மேற்குத் தொடர்ச்சி மலைக்கும், வங்காளவிரிகுடாவிற்கும் இடைப்பட்டதாய், பழவேற்காடு முதல் குமரிமுனை வரையிற் பரந்து கிடக்கும் பெரு நிலப் பகுதியாகிய கருநாடகத்திற் பேசப்படுவது தமிழ். தென் திருவாங்கூர்ப் பகுதியிற் குமரிமுனை தொடங்கித் திருவனந்தபுரம் வரையிலும் தமிழ் பேசப்பட்டு வருகிறது. ஈழத்தின் வடமேற்குப் பகுதியிலும் அது வழங்குகிறது. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தமிழர்

* Brahui.

ஈழஞ்சென்று குடியேறினர் என்பதற்குச் சான்றுகள் உள. ஈழத்திலுள்ள காப்பித் தோட்டக் கூலிகளிற் பெரும்பாலோர் தமிழர்களே. கொழும்பு நகரிற் பொருள் திரட்டும் வணிகர்களிற் பெரும்பாலார் தமிழர்களே. சென்னை மண்டிலத்தின் பற்பல பகுதிகளிலுறையும் ஐரோப்பியப் பெருமக்களின் வீட்டு வேலைக்காரர்களும், பணியாளர்களும் தமிழர்களே. இதனாலேயே தென்னிந்தியக் கூற்றங்கள் பலவற்றிலும் வழங்கும் மொழி எதுவாயிருந்தாலும் ஆங்காங்குப் படைமக்கள் உறையும் பகுதிகளிலெல்லாம் தமிழே வழங்கி வருகிறது. மலையாள நாட்டுக் கண்ணனூரிலாதல், கன்னட நாட்டுப் பெங்களூரிலாதல், தெலுங்கு நாட்டுப் பல்லாரியிலாதல், இந்துஸ்தானி நாட்டுச் சிக்கந்தராபாத்திலாதல் ஆங்காங்குத் தமிழ்மொழி பயிலக் காண்பதும் இதனாலேயாம்.

பெகு, பினங்கு, சிங்கப்பூர் முதலிய கீழைநாடுகளிற் காணப்படும் **கலிங்கர்**களிற் பெரும்பாலோர் தமிழர்களே. மோரீசுக்கும் மேலையிந்தியக் குடியேற்ற நாடுகளுக்கும் சென்றுள்ள கூலிமக்களிற் பெரும்பாலோர் தமிழர்களே. சுருங்கக் கூறின், பொருள் திரட்டும் வழி யமைந்துள்ள இடங்களிலெல்லாம் தமிழர்களைக் காணலாம், சோம்பேறிகளாய், நகத்தில் அழுக்குப்படாமல் வாழவிரும்புஞ் செல்வர்கள் இருக்குமிடங்களிலெல்லாம் தமிழர்களை அணியணியாய்க் காணலாம். இஃதொன்றைக் கருதின் தமிழர்களைக் கீழைத்தேய கிரேக்கர்கள் அல்லது ஸ்காட்ச்கள் என்று கூறலாம்போலும். இந்துக்கள் என்று அழைக்கப்படும் பெருந்திரளான மக்களிடையே குருட்டு நம்பிக்கைகள் மலிந்து காணப்படும் என்று கூறுவதுண்டு. ஆயினும் அக்குருட்டு நம்பிக்கைகள் மிகவும் குறைந்த அளவிற்காணப்படும் ஒரு பகுதியினர் அவர்களுள்ளும் இருக்கின்றனர் என்றால் அவர்கள் தமிழர்களேயாம். பொருளீட்டும் பெருமுயற்சியும் பேருழைப்பும் வாய்ந்தவர்கள் தமிழர்களே. தெலுங்குமொழி பேசும் மக்கள் தமிழ்நாட்டிற் பத்தில் ஒரு பங்கு காணப் படலாம். அவர்களையும் முகமதியர்களையும் நீக்கிக் கணக்கிடின் தமிழ்மொழி பேசுந் தமிழ்மக்களின் தொகை ஏறக்குறைய 220 இலட்சங்களாகும்.

சென்னை

தமிழ்நாட்டின் தலைநகரம் சென்னையே; அதுவே தென்னிந்திய மண்டிலத்திற்கும் தலைநகரமாகும். தமிழ்மக்கள் அந்நகரைச் **சென்னபட்டினம்** என்றே வழங்குவர். சந்திரகிரித் தெலுங்கரசர்க்குக் கப்பங் கட்டி வந்தவரும், செங்கற்பட்டு நாயக்கரின்

மாமனருமான சென்னப்ப நாயக்கர் என்பவரிடமிருந்து ஆங்கிலேயவணிகக் குழாத்தினர் ஒரு சிறு கோட்டையைப் பெற்று அதனை அவர்கள் அரண் அமைந்த தொழிற்சாலையாக மாற்றி யமைத்துக் கொண்டனர். மதராஸ் (மதராஸ் பட்டினம்) என்று ஆங்கிலேயர்களால் அஃது அழைக்கப்பட்டு வந்தமைக்குச் சரியான காரணந் தெரியவில்லை. ஒருகால், தமிழ்ச் சொல்லான "மதில்" என்பதற்கு நேரான தெலுங்கு **மதுரு** (கோட்டையின் மதிற் சுவர்) என்ற சொல்லின் அடியாக அப்பெயர் பிறந்ததுபோலும்! மதராஸ் நகருக்கு அண்மையில் சதராஸ் என்று ஓர் ஊரும் உள்ளது. இவ்விரு ஊர் களின் பெயரொலிகளில் ஒற்றுமை யிருப்பது காணப்படும். "சதுரங்கம்" என்ற சொல் சதுரையாகக் குறுகி ஆங்கிலேய ரால் சத்ராஸ் என்று அது திரித்து வழங்கப்பட்டதுபோலும். இனி, மந்தராஜ்பட்டினம் என்பதன் திரிபே மதராஸ் என்று கூறுவோரின் கூற்றுக்கு யாதொரு ஆதாரமும் கிடைக்கவில்லை.

தமிழ்

தமிழ் என்பதிலுள்ள ழகர வொற்றை ளகர வொற்றாகத் திரித்துத் "தமிள்" என்று ஒருசிலர் வழங்குவர். ஐரோப்பியர் முதலில் அதைத் "தமுல்" என்றே புகன்று வந்தனர். பிரெஞ்சுக்காரர் இவ்வாறாகவே எழுதி வைத்தனர். ஆனால் அவர்களுக்கு முன் போந்த போர்த்துகேசியர்கள் தமுல் என்றோ தமிள் என்றோ கூறாமல் "மலபார்" என்றே தமிழ்மொழியைக் குறித்து வந்தனர். புதுச்சேரியிலிருந்த பிரெஞ்சு அரசாங்க ஆட்சியா ளரான டியூப்ளேயின் திவானாகவிருந்தவர் ஆனந்தரங்கப் பிள்ளை என்பார்; அவருக்குப்பின் திவானாகவந்த அவ் ஆனந்த ரங்கப்பிள்ளையின் மருகருக்கு, கி. பி. 1766-ஆம் ஆண்டில் பிரான்சு மன்னர் பதினைன்காம் **லூயி** என்பார் "**மலபார்** (**தமிழ்த்**) **தலைவர்**" என்றபட்டத்தை வழங்கியது போர்த்து கேசியர் வழக்கை யொட்டியே போலும்.

இதனையே, "சமஸ்கிருத பிராகிருதமொழி ஆராய்ச்சி" எழுதிய **கோல்புரூக்** என்பவர், "சென்னை மண்டிலத்தின் மொழி தமிழ்மொழியே; ஆனால் அதனை ஐரோப்பியர் 'மலபார்' என்று கூறுகின்றனர்" எனக் குறித்துள்ளார். கி. பி. 1577 அல்லது 1579-ல் மலையாளக் கரையிலுள்ள **அம்பலக் காடு** என்ற ஊரில் முதன் முதலாக அச்சிடப்பட்ட தமிழ் நூலின் மொழியை அந்நூலுக்குடையார் "மலவார் அல்லது தமிழ்" என்றே குறித்துள்ளனர். இதனாலும் தமிழ் என்பதே சரியான மொழிப்பெயர் என்று எளிதில் ஊகிக்கப்பெறும்.

(தொடரும்)

கொன்றிடல்போல் ஒரு வார்த்தை

[நீலகிரி திரு. V. S. வேங்கடராமன்]

"கொன்றிடல் போல் ஒரு வார்த்தை—இங்குக்
கூறத்தகாதவன் கூறினன் கண்டீர்"

என்றார் அன்று பாரதியார்.

பெரிய உத்தியோகத்திலிருந்தால், இங்கிலீஷ் நூலின் கருத்து எந்தப் பாஷையிலும் இல்லை யென்று சொல்வது, முதலானவற்றைப் பெருமையாகக் கொள்பவர்கள் எந்தக் காலத்திலுமுண்டு என்று டாக்டர் உ. வே. சாமிநாதையர் பிரமாதி ஆவணிக் கலைமகளில் "வி. கிருஷ்ணசாமி ஐயர்" என்ற கட்டுரையின் முதலில், குறித்தமைக்கு உதாரணமாக, அதே சஞ்சிகையில், மனத்தைப் பண்படுத்தல் என்ற கட்டுரையாளர்;

"தமிழர்களிடம் கல்சர் அதிகம் இருக்கின்றதே யொழிய அந்த வார்த்தையை மொழி பெயர்த்துச் சொல்வதற்குத் தகுந்த வார்த்தை இல்லை"—என்பதாய் எழுதி யிருக்கின்றனர்.

மிகப்பல உட்கருத்துக்கள் செறிந்த சொல்லாகப் பண்பு எனும் மொழியே அக் கட்டுரையாளர் குறித்த பொருளில் கல்சர் என்பதற் கேற்றவாறுள்ளது. மிகப் பழங் காலத்ததான சொல் லென்பதற்குக் கீழ் உள்ள சான்றுகள் சாலும்.

(1) "பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்."

நல்வந்துவனார்-நெய்தற்கலி.

(2) திருவள்ளுவர் பண்பினைப் (culture) பத்துப் பாடல்களிற் குறித்தனர்.

(3) "பாடறிந்தொழுகும் பண்பினோரே."

—புறம்.-கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார்,

தமிழர்க்கு வாழ்வு உயர்ந்தாலன்றோ கருத்தினை வெளிப்படுத்துங்கால், பண்பு என்ற சொல்லைத் தம் வீட்டுப் பேச்சில் பயன்படுத்துவர். இக் காலத்துத் தமிழர் பண்பு எனபதை மொழியாது போகக் கல்சர் பொருளில் தமிழில் ஏற்ற சொல் இல்லை யென்றும் வாய் கூசாது சொல்லவும் நேர்ந்தது. தமிழர் வாழ்வு பெருக இறைவனருள்க.

சொல்லவுங் கூடுவ தில்லை அவை
சொல்லுந்திறமை தமிழ்மொழிக் கில்லை

என்று கூறத் தகாதவன் கூறினதாய்ச் சொல்லும், பாரதியின் வாக்கிற்கு வேறோர் உதாரணமாக "மனத்தைப் பண்படுத்தல்" என்ற கட்டுரையாளர் தமிழில் கல்சர் சமமான சொல் இல்லைஎன்று எழுதினது குறித்து மிக வருந்தி யிதனை யெழுதினேன்.

மதிப்புரை

'கபிலர்' ஆராய்ச்சி :—அண்ணுமலைப் பல்கலைக் கழகச் சொற்பொழிவாளர் பண்டித திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் முதற்கண் "கபிலர்" என்று ஓராராய்ச்சி நூல் எழுதியுள்ளார்கள். சென்னைப் பல்கலைக் கழகச் சொற்பொழிவாளரான வித்துவான் திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள் பின்னர்த் தாம் எழுதிய "கபிலர்" என்னும் உரைநடை நூலில் முன்னவர் கண்ட முடிபுகளிற் சிலவற்றை ஆய்ந்து மறுத்துரைத்துள்ளார்கள். அம் மறுப்புக்களை மீண்டும் ஆராய்ந்து நாட்டார் அவர்கள் இச்சிறு நூலில் தம் முடிபுகளை நிலைநாட்டியுள்ளார்கள். தமிழிலக்கிய ஆராய்ச்சி மாணவர்கட்கு இந்நூல் அரியதொரு கருவூலமாம். இதன் விலை அணு 6

விருத்தப்பாவியல் :—சென்னை வழக்கறிஞராயிருந்து காலஞ்சென்ற T. வீரபத்திர முதலியார் அவர்கள் B. A., B. L. எழுதிய சிறந்த யாப்பிலக்கண ஆராய்ச்சி நூல். விருத்தப்பாவின் வரலாற்று முறையைக் குறித்த ஓர் அரிய ஆங்கிலக் கட்டுரையும் இதன்கண் ஆசிரியரால் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது. இதன் விலை அணு 12

சைவ சாஸ்திர பரிபாலனம் :—சமய சம்பந்தமான மாத வெளியீடு. ஆகமங்களிலும் சமய நூல்களிலும் முற்றக் கற்றுத் துறைபோகிய யாழ்ப்பாணம் அச்சுவேலி ச. குமாரசுவாமிக் குருக்களை இதழாசிரியராகக்கொண்டு வெளி வருவது.

இதன் ஆண்டுச் சந்தா ரூ 2·

தமிழ்ச் சுருக்கெழுத்துத் தற்போதினி :—தஞ்சை P. G. சுப்பிரமணிய ஐயர் B.A. அவர்களால் புது முறையில் வெளியிடப்பட்ட அரிய கருவி நூல். தருமபுர ஆதீன மகா சந்நிதானம் ஸ்ரீ சண்முக தேசிக பரமாசிரிய சுவாமிகளின் ஆதரவைப்பெற்று வெளிவந்துள்ளது. எளிய முறையில் தமிழ்ச் சுருக்கெழுத்து முறையைத் தானே கற்றுக்கொள்வதற்கு நன்கு பயன்படும் சிறந்த நூல்.

இதன் விலை ரூ. 3-8-0.

குறிப்பு : மேற்கண்ட நூல்கள் எம் கழகத்திற் கிடைக்கும்.

“ தானே தமிழ் கற்கும் முறை ”

புதுவை,
30-9-1939

அன்பு,

தாங்கள் விரும்பியனுப்பிய “ தானே தமிழ் கற்கும்முறை ” என்னும் நூல் புதிய முறையில் எளிய நடையில் திருத்தமாக அமைந்திருக்கிறது. எழுத்தியக்கம் ஒன்று கிளர்ந்தோங்கும் இந்நாட்களில் இந்நூல் பெரிதும் போற்றப்படும். சிறுவரும், வயது முதிர்ந்தவரும் எழுத்தறிவுபெற எழுந்த மிகச் சில நூல்களில், இந்நூலே மிகச் சிறந்தது, மாசற்றது, பயனோங்கியது என்று யாவரும் கூறுவர்.

எண்ணும் எழுத்தும் கண்ணெனை மதிக்கப்பெற்ற நமது நாட்டில் இன்று நூற்றுக்குப் பத்துப்பேர்கூட எழுத்தறிவில்லாதிருப்பது வருந்தத்தக்கது. மற்ற நாடுகளிலெல்லாம் ஏறக்குறைய நூற்றுக்கு எண்பது பேர்கள் படித்தவர்களா யிருக்கிறார்கள்.

உலகமொழிகளில் மிகவும் எளிதானது, இனிமையானது நமது தமிழ்மொழியேயாகும். தமிழ் ஒலிகள் சொற்செட்டும் மூச்சுச் செட்டும் உடையன ; சில மொழிகளிற் பல பொருள்களை விளக்கத் தக்கன. முப்பதெழுத்துக்களில் முற்றமுடிந்தமொழி தமிழேயாகும். உலக மொழிகளை யெல்லாம் தமிழ் எழுத்துக்களைக்கொண்டு எழுத வகையுண்டு. புள்ளியும் கோடும் சேர்த்தால், வடமொழி மெய்யெழுத்துக்களைத் தமிழில் எழுதலாம். ஆய்த எழுத்தைக்கொண்டு அரபி, ஆங்கிலம், முதலிய மொழிகளில் வழங்கும் புதிய ஒலிகளை விளைவிக்கலாம். தமிழுக்கே சிறப்பான ழகரத்தால் பார்ஸி, பிரெஞ்சு முதலிய மொழிகளுக்குச் சிறப்பான ஒலிகளை விளைவிக்கலாம். நமது நாட்டுப் பொது மொழியை எளிதில் அமைக்கக் கூடிய வரி வடிவம் தமிழுக்கே உண்டென்பது ஆராய்ந்து பார்த்தால் விளங்கும். தமிழில் கூட்டெழுத்துத் தொல்லையில்லை. ஆங்கிலத்தைப்போல முத்துக் கோத்ததுபோல் தமிழ் எழுத்துக்களை எழுதலாம். ஆங்கிலத்தில் பல எழுத்துக்களைக் கொண்டெழுதுவதைத் தமிழில் சில எழுத்துக்களால் எழுதலாம். எடுத்துக் காட்டாக Scene (ஸீன்), Reality (ரியாலிடி), Height (ஹைட்), Eye (ஐ), Knowledge (நாலெட்ஜ்), Tongue (டங்), Possibility (பாஸிபிலிடி) Railway (ரைல்வே) முதலியன.

தமிழ் எழுத்துக்களின் சிறப்பைத் தமிழர் அறியவேண்டும், உலகிற்கும் அறிவிக்கவேண்டும். இந்திய மொழிகளில் கூட்டெழுத்தில்லாமல் உள்ளது தமிழ்—ஒன்றேயாம். தமிழ் வரிவடிவை வடநாட்டாரும் அறியும்படி செய்வது தமிழன்பர் கடமை. இனிய மொழியைத் தாய்மொழியாயுடைய தமிழரில், இன்று நூற்றுக்கு எட்டுப்பேர்கூட எழுத்தறிவிலலாதிருப்பது வருந்தத்தக்கது. எழுத்தறிவித்தலைத் தமிழர் ஒரு புண்ணியமாகக் கொள்ளவேண்டும். ‘எழுத்தறிவித்தவன் இறைவனாகும்’. “தமிழ் கற்கும் முறை”யெனும் இந்நூல் பதினாயிரக் கணக்கில் பரவவேண்டும். திரு நாட்களில் வீண் செலவுகளைச் சுருக்கி, இத்தகைய கண்போன்ற நூல்களை

நூற்றுக் கணக்கில் வாங்கி எழுத்தறியா மக்களுக்குத் தருவதை ஒரு சிறந்த அறமாக நம்மவர் கருதவேண்டும். இந்நூலில் வழங்கும் சொற்களெல்லாம் அனைவரும் எளிதாகப் படத்தைப் பார்த்தே அறியக் கூடியவையாம். வீடுதோறும், பள்ளிதோறும் சிறுவர், சிறுமியர் கைகளில் இந்நூல் விளங்குக. இன்னும் ஓராண்டில் எழுத் தறியாத் தமிழர் இல்லை எனும்படி இந்நூற்பயனைத் தமிழகம் எய்துக.

அன்பு, அன்பு, அன்பு, —சுத்தானந்தபாரதி

முதியவர் கல்வி

17-9-1939 ஞாயிறன்று மாலை 6 மணிக்கு சென்னை கோவிந்தப்ப நாய்க்கர் உயர்நிலைப்பள்ளி மண்டபத்தில் சென்னை நகராண்மைக் கழகத் தலைவர் (மேயர்) உயர்திரு. K. வேங்கடசாமி நாயுடு, பி. ஏ., பி. எல்., எம். எல். சி. அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. திருவாளர்கள் செ. தெ. நாயகம், T. R. கோதண்டராம முதலியார், காழி சிவ. கண்ணுசாமி பிள்ளை, பண்டிதை நாராயணியம் மாள் ,திருவாட்டி பத்மாவதியம்மாள், வெ. பா. கமலநாத முதலியார் திருமலைசாமி, வீரராகவன் முதலியோர் வந்திருந்தனர்.

உயர்திரு மேயரவர்கள் தலைவராயிருந்து கூட்டத்தை நடத்து மாறு திரு. வ. சுப்பையா பிள்ளை கேட்டுக்கொள்ள அவர்களும் அதற்கிசைந்து தலைவராய் அமர்ந்து கூட்டத்தை நடத்தினார்கள்.

“சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தேவாரம் திருவாசகம் முதலிய நூல்களை, மிகவும் அழகாய் அச்சிட்டு உயர்ந்த கட்டடஞ் செய்து குறைந்த விலைக்கு விற்று வருவதோடு முதியவர் கல்வியின் பொருட்டும் ‘தானே தமிழ் கற்கும் முறை’ என்ற நூலை மிகவும் அழகாக வெளியிட்டிருப்பதைப் பெரிதும் பாராட்டுகிறேன். முதிய வர் கல்விக்காகச் சென்னை நகர மன்றத்தின்வழி ஒரு திட்டம் போட் டுக்கொண்டிருக்கிறோம். 1941 மக்கள் எண்ணிக்கை (cencus) எடுக் கிறபோது சென்னையில் 100-க்கு 90 பேர்களாவது எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் என்பதை உண்டுபண்ணவேண்டும்” என்று மிகவும் ஆர்வத்தோடு மேயர் அவர்கள் பேசினார்கள். பின்பு முதியவர் கல்வி யின் முதன்மையைப் பற்றியும், “ தானே தமிழ்கற்கும் முறை” என்ற நூலின் சிறப்பைப்பற்றியும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் தமிழ் மொழிக்கும் தமிழ் மக்கட்கும் செய்து வருகின்ற பணியைப் பற்றியும் திருவாளர்கள் வித்வான் மா. இராசமாணிக்கம் பிள்ளை, B.O.L., துடிசைகிழார் அ. சிதம்பரனார், வித்வான் T. P. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, M.A.,B.L., பண்டிதை S. கிருஷ்ணவேணியம்மையார், T. S. R. கோபால் ஆகிய அறிஞர்கள் பேசினார்கள். பின்பு கழக வினையாளர் வ. சுப்பையா பிள்ளை தலைவர் அவர்கட்கும், சொற்பொழி வாளர்கட்கும் நன்றி கூறியதோடு கழக மேடையில் முதியவர் கல்விக் காக வகுப்பு ஒன்றும் விரைவில் தொடங்கப் பெறும் என்றும் அறிவித்தார். கூட்டம் 8 மணிக்கு இனிது கலைந்தது.

சென்னை மாகாணத் தமிழர் ஆறுவது மாநாடும், தமிழ்க்கலைச் சொல்லாக்க மாநாடும்

30-9-39, 1-10-39 சனி ஞாயிறுகளில் திருநெல்வேலி திரவியம் தாயுமானவர் இந்து கலாசாலையின் ஆங்கில மண்டபத்தில் திருவனந்தபுரம் இசைத் தமிழ்ச் செல்வர் உயர்திரு தி. இலட்சுமண பிள்ளை அவர்கள் பி.ஏ., தலைமையில் நடைபெற்றன. சாத்தூர் வழக்கறிஞரும் தமிழ்ப் புலவருமாகிய உயர்திரு T. S. கந்தசாமி முதலியார், பி.ஏ., அவர்கள் அறிவுநூலும் சமயமும் (Science and Religion) என்னும் பொருள்பற்றி இரண்டு நாட்களிலும் மிகவும் விளக்கமாகச் சொற்பொழி வாற்றினார்கள்.

* * *

தமிழ்நாட்டில் உலகப் பொது மொழியாய ஆங்கிலமும், தாய் மொழியாய தமிழும் கட்டாயப் பாடமாக இருத்தல் வேண்டுமென்றும், வேண்டுமானால் இந்தி விருப்பப் பாடமாக இருக்கலாமென்றும் அகில இந்திய காங்கிரஸ் தலைவராயிருந்த உயர்திரு S. சீனிவாசையங்கார் அவர்கள் அண்மையில் ஒரு கூட்டத்தில் பேசியுள்ளார்.

"சக்தி"

மாத வெளியீடு

அரசியல், சமூகசீர்திருத்தம், தமிழர் பெருமை, தமிழர் நாகரிகம், தமிழர் சமுதாயம், பண்டைநாட்டுப் புலவர் வரலாறு, இலக்கியம், சிறந்த தொடர்கதை, விஞ்ஞானம், பூகோளம் முதலிய பல பகுதிகளுடன் உயர்ந்த முறையில் அச்சிடப்பெற்று மாதந்தோறும் தவறாமல் மலர்வது.

படிக்கத் தெரிந்த ஒவ்வொரு தமிழரும் தத்தம் செலவைச் சிக்கனம் செய்தேனும் கொள்ளவேண்டியது அவசியம்

தனிப்பிரதி :	உள்நாடு : அணா 4;	பர்மா அணா: 5;	மலேயா அணா 6;
வருடச்சந்தா :	,, ரூ. 3 8	,, ரூ. 4	,, ரூ. 5

தமிழர்களே! இன்றே இதற்குரிய வருடச்சந்தாவை அனுப்பி உங்கள் மதிப்பை மெய்ப்பியுங்கள்

சக்தி காரியாலயம், 52, அரண்மனைக்காரத் தெரு, சென்னை.

தமிழர் திருமண மாநாட்டு மகளிர் கூட்டம்